REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னாகம், கர ஆனி உச 8-7-51 ஞாயிறு (காந்தி ஆண்டு 82) | இதழ் 2

JAFFNA COLLEGE LIBRARY
9 JUL 1951
VADDUKODDAI, CEYLON

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

# நாட்டின் உயர்வு

## மத்திய வகுப்பினர் உயிர்நாடி

### சுதேச வைத்தியர் கூட்டுறவுச் சங்கம்

யாழ்ப்பாணம் 6-7-51

**ஈழமணித் திருநாட்டின்** உயர்வுக்காகவும் அதன் பெருமைக்காகவும் உழைத்த பெரியார்களின் உறைவிடமாக யாழ்ப்பாணம் விளங்கி வருகின்றதென நீதியரசர் கிரேஷியன் அவர்கள் சுண்டிக்குளி பரி. யோவான் கல்லூரிப் பரிசளிப்பு விழாவின்போது குறிப்பிட்டிருந்தார். இவ் விழா சென்ற சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்றது. நீதியரசர் தொடர்ந்து பேசியதாவது; இன்று சுதந்திர இலங்கையில் வாழ்ந்து வருகின்றோம். இந்நாட்கள் மிகவும் கொந்தளிப்பான நாட்கள். இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்திருப்பதால் தேசபக்தி மிகுந்த ஆடவரும் மகளிரும் நாட்டுக்கு அதிகமாகத் தேவைப்படுகின்றனர். மத்திய வகுப்பினர் ஒரு நாட்டின் உயிர்நாடி போன்றவர்கள். மத்திய வகுப்பினரே பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கி வருகின்றனர். இந்த அபிப்பிராயம் கண்ணியமான முறையில் அமைந்து கொள்வது மிக அவசியமாகும்.

கல்லூரிகள் நாகரிகம் செழிப்புற்று வளர்வதற்குரிய விதைகளின் உறைவிடமென்பதை நாம் உணரவேண்டும்.

**மேயர் புத்திமதி**

சென்ற ஞாயிற்றுக்கிழமை மேயர் ஸி. பொன்னம்பலம் அவர்களின் ஆதரவில் இந்திய செய்திப் படக் காட்சி நடைபெற்றது. இதனை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர்களான திரு. வி. சுப்பிரமணியம் அவர்களும் திரு. டி. ஏ. ராவ் அவர்களும் ஒழுங்குசெய்து வைத்தனர்.

மேயர் தமது பேச்சில் இக்கால வாலிபர்களுக்கு உகந்த சில புத்திமதிகளையுங் கூறியிருந்தார். அமெரிக்காவையும் பிரிட்டனையும் பின்பற்றும் பிழையான கொள்கை வாலிபரிடையே ஏற்பட்டு வருகின்றது. இதை மேயர் கண்டித்ததுமன்றி இந்தியாவையே இந்நாட்டு வாலிபர்கள் பின்பற்ற வேண்டுமெனவுங் கூறினார். இத்துறையில் அப்படக் காட்சி ஒரு வழிகாட்டியாக இருக்கின்றதென்பது மேயரின் அபிப்பிராயமாகும்.

**சுதேச வைத்தியம்**

வட இலங்கைச் சுதேச வைத்தியர்கள் ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர். சுதேச வைத்தியர்களின் செல்வ நிலையைச் சீர்ப்படுத்துவதே இக் கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கமாகும்.


**நமது நிருபர் கடிதம்**

சித்த ஆயுள்வேத மருந்துகளை நன்கு பரிசீலனைசெய்து சாஸ்திரரீதியில் அவற்றைத் தயார்செய்வதும் இச் சங்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று.

இச் சங்கத்தின் ஆரம்பக் கூட்டம் சமீபத்திற் கூட்டுறவு உதவிப்பதிவாளர் காரியாலயத்தில் நடைபெற்றது. திரு. எம். கதிரவேற்பிள்ளை (கஸ்தூரியார் வளவு) தலைவராகவும் திரு. ஏ. இராசநாயகம் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாகசபையும் அமைக்கப்பட்டது.

**சீமேந்துத் தொழிற்சாலை**

காங்கேசன்துறை, சீமேந்துத் தொழிற்சாலையின் தொழிற்பகுதி அதிபர் எச். டி. சோறென்ஸன் அவர்களின் உத்தியோககால எல்லை முடிவடைந்துவிட்டபடியால் அவர் அவசர அவசரமாகப் பதவியினின்றும் விலகவேண்டியதாயிற்று.



இலங்கைப் புகையிரதப் பகுதி அதிகாரி எம். கனகசபை அவர்கள் வட இந்தியாவில் நான்கு மாதம் காலம் தங்கிவிட்டு ஊர் திரும்பியிருக்கின்றார். புகையிரதப்பகுதியைச்சீர் பெறச் செய்வதற்குச் சில யோசனைகளுடன் தாம் வந்திருப்பதாக அவர் மகிழ்ச்சியுடன் தெரிவித்திருக்கின்றார்.

# சமரசப் பேச்சு

## கேஸோங் நகரில் மகாநாடு

### கொம்யூனிஸ்டுகள் யோசனைக்கு இணக்கம்

**கோரியாப் போரை** நிறுத்தவேண்டு மென்பது பற்றிய சமரசப் பேச்சுக்களை கேஸோங் என்னுமிடத்தில் நடாத்த வேண்டுமெனக் கொம்யூனிஸ்டுகள் கூறியிருந்தனர். இந்த யோசனையை ஐ. நா. தேசாதிபதி தளபதி ரிஜ்வே ஒப்புக் கொண்டிருக்கின்றார்.

கோரியாப் போர் முனையிற் கேஸோங் பிரதேசத்திற் கொம்யூனிஸ்டுகளுடன் ஐ. நா. படைகளுக்கு அதிக தொடர்பு இல்லையெனத் தெரிகின்றது.

கேஸோங் நகரமானது அட்சரேகை எல்லைக்குத் தெற்கே உள்ளது. இது யாருடைய ஆதிக்கத்தில் இருக்கின்றதென நிச்சயமாகக் கூற முடியாது. சமரசப் பேச்சுவார்த்தையின் போது அமெரிக்கா தெரிவிக்கவேண்டிய நிபந்தனைகள் தளபதி ரிஜ்வேக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அட்சரேகை எல்லைக்குக் குறுக்காகச் செல்லும் போர் முகப்புப் பிரதேசத்தில் இரு சேனைகளுக்கு மிடையில் 20 மைல் அகலமுள்ள இடைவெளி ஒன்று ஏற்படுத்தப்படும்.

**கோரியா புகார்**

சிங்மன்ரீ துருப்புகளும் அமெரிக்கர்களும் வட கோரியாவில் மிருகத்தனமாகப் படுகொலை புரிகின்றனரெனவும் ஐ. நா. சங்கம் இதனை அலட்சியம் செய்து விட்டதெனவும் வட கோரியா புகார் செய்துள்ளது.

இதற்கிடையில் 70,000 துருப்புக்கள் கொண்ட ஒரு புதிய சீனப்படை மஞ்சூரியாவிலிருந்து தென் கோரியாவின் தலைநகரான சியோலுக்கு வடக்கே சென்றிருக்கின்றது.

கோரியாவில் இப்போது யுத்த உக்கிரம் குறைந்து வருகின்றது. இருதரப்பிலும் விசேஷமாகக் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் ஒன்றுமில்லை.

தென்கிழக்குக் கோரியாவிலுள்ள பூசான் நகரிலே தென் கோரிய அரசாங்கக் கட்சியின் ஆதரவிற் சமீபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. வட கோரியாவையுங் கைப்பற்றிய பின்னரே போரை நிறுத்த வேண்டுமெனவும் 38-வது அட்சரேகையிற் போரை நிறுத்தக் கூடாதெனவும் அவர்கள் வேண்டியிருக்கின்றனர்.

சுவாமி

## வீரேஸ்வராநந்தஜி

### யாழ்ப்பாணத்தில் வரவேற்பு

ஸ்ரீ ராமகிருஷ்ணசங்கத்தின் துணைச் செயலாளர் சுவாமி வீரேஸ்வராநந்தஜி அவர்களுக்கு இம்மாதம் 7-ந்திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் யாழ்ப்பாணத்தின் சார்பில் ஒரு வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

# கிராம நிர்வாகம்

## சங்கச் சீரமைப்பு வேலை

நமது அரசியல் நிருபர்

**இலங்கையிற் கிராமச்** சங்கங்கள் கடந்த 35 வருடங்களாக இருந்துவருகின்றன. ஆரம்பத்தில், ஒரு பத்து வருட காலமாக இச் சங்கங்களின் தலைவர்கள், அங்கத்தவர்களால் தெரியப்படாது, அரசினராலேயே நியமிக்கப்பட்டுவந்தனர். சென்ற இருபத்தைந்து வருடங்களாகக் கிராமச் சங்க நிர்வாகத்தைக் கிராம மக்களே நடத்திவருகின்றனர். அப்படியிருந்தும் இச் சங்கங்கள் நாளடைவில் விருத்தியடைந்து நாட்டிற்குத் தேவையான நன்மைகளை வருவித்தனவா வென்பது ஆராயத்தக்கது. எத்தனையோ நன்மைகள் இச் சங்கத்தைச் சாதனமாகக்கொண்டு செய்யக்கூடியனவாயிருந்தும் அவைகள் ஏற்படாது போவது பெரிய கவலைக்கிடமான விஷயமே. ஆரம்பத்திலே செய்து வந்த சில பணிகளையே இச் சங்கங்கள் மேன்மேலும் செய்துவருகின்றனவே யன்றி ஏதாவது விசேஷ நன்மையை நாட்டில் நிலைபெறச் செய்தனவாகக் காண்பதற்கில்லை. பொதுவாகக் கூறின் இச் சங்கங்கள் சுயநலப் புலிகள் சூழ்ச்சிகள், சதிமோசங்கள் செய்யும் இடமாக [illegible] தென்றே கூறவேண்டும்.

இச் சங்கங்களைத் திருத்தி அமைத்து நாட்டிற்குக் கூடிய நன்மைகளை வருவிக்கச் செய்யும் நோக்குடன் கிராமச் சங்கச் சட்டம் இப்போது பிரதிநிதிகள் சபையில் அரசினராற் சீர்ப்படுத்தப்படுகின்றது. கிராம வேலைகளைக் கூடிய சிறப்புடன் செய்வதற்குக் கூடிய அதிகாரமும் போதிய பணமும் இச் சங்கங்கட்கு கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். ஒழுங்கைகள் திருத்துதல், கிணறுகள் வெட்டுதல், மடங்கள் கட்டுதல் முதலிய வேலைகளுடன் மாத்திரம் நின்றுவிடாது. கிராமச் சங்கத்தினர், குடிசைத் தொழில், சுகாதாரம், கல்வி விருத்தி முதலிய துறைகளிலும் நெருங்கி ஈடுபட்டு உழைக்கக் கூடிய அதிகாரத்தையும உரிமையையும் பெறவேண்டும். இந்தச் சீரமைப்பு வேலைகளைச் செய்து முடித்தற்கு அரசினர் உதவியை முற்றாக நம்பியிருப்பது முறையன்று.

சிற்சில இடங்களிற் கட்சிகள் பேதங்கள் தோன்றி மிக்க கேவல நிலை ஏற்பட்டு விடுகின்றது. தலைவரைத் தெ[illegible] சங்கங்கள் [illegible]யாதிய அங்கத்தவர் சமூகமளியாமையால் சங்கவேலைகள் இனிது நடைபெறாது தாமதமடையும் நிலையும் சில சங்கங்கட்கு ஏற்பட்டு விடுகின்றது. இந்த ஊழல்கள் ஏற்படாது தடுப்பதற்காகப் புதிய திருத்தப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. தலைவர்களைத் தெரியவியலாது சங்கடம் ஏற்படின் ஸ்தல ஸ்தாபனப்பகுதி மந்திரியாரே தலைவரை நியமிக்கலாமென்று புதிய திருத்தப் பிரேரணை கூறுகின்றது. இது சனநாயக அரசியல் முறைக்கு நேர்விரோதமானது. ஒரு சங்கம் தனது தலைவரைத் தெரியவியலாதும், தனது கடமைகளைச் சீரே செய்ய வியலாதும் சங்கடமடையின், மந்திரியார், அச் சங்கத்தைக் குலைத்துவிட்டுப் புதிதாக அங்கத்தவர்களைத் தெரிய ஏற்பாடு செய்வதே முறையாகும்.

மேலும் கிராமச் சங்கங்கள் சிறந்த பணிகளை அதிக நன்மையுடன் நாட்டுக்குச் செய்வதாயின் அங்கத்துவம் வகிப்போர், கல்வியிலும் ஒழுக்கத்திலும், பணியாற்றும் தகுதியிலும் சிறந்த ஆற்றலும் ஆர்வமும் உடையராகவேண்டும். சுயநலத்தை முற்றாக ஒழித்தவராகவேண்டும். எனவே கிராமமக்கள் தகுதிவாய்ந்தவர்களை அங்கத்தவராகக் கொண்டால் எவ்வித ஊழல்களும் வந்து புகக் காரணமில்லை. அதை விட்டுச் சுயநலநாட்டத்துடன், பணஞ் சம்பாதிக்கலாமென்ற நோக்கத்தை முற்றாகக் கொண்டு அங்கத்துவத்தை நாடுவோர்க்கு இடங்கொடுப்பின் கிராம நிர்வாகம் அதோகதி அடையாதிருப்ப தெப்படி? தெரியப்படும் அங்கத்தவரிலேயே கிராமத்தின் நல்விருத்தியும் உறுதியான நிலைபேறும் தங்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர் வதந்தி

கொண்டேடி

- இலங்கைக்கு இன்று இருமுக்கிய தேவைகள் அவசியமாம்.
- ஒன்று உயர்ந்த பண்பாடாம்
- மற்றது அப்பழுக்கற்ற பொதுஜன அபிப்பிராயமாம்.
- இவை யிரண்டும் பொது வாழ்க்கைக்கு உயிர் போன்றவையாம்.
- நீதியரசர் கிரேஷன் அவர்கள் இதனை யாழ்ப்பாணத்திற் கூறினாராம்.
- உயிரற்ற மக்களும் இலவுலகில் வாழ்கின்றனராம்.
- வாழ்க்கைக்கு உணவு அவசியமாம்.
- இலக்கியமும் உணவு போன்றதுதானும்.
- உணவிற் கல்லும் மண்ணுஞ் சேர்ந்துவிடுகின்றனவாம்.
- இலக்கியத்திலும் கல்லும் மண்ணும் உண்டாம்.
- கல்லாத மக்களே மிக நல்லவர்களாம்.
- அவர்கள் அப்பழுக்கற்றவர்களாம்.
- குளத்திலும் அழுக்கு நிறைந்துள்ளதாம்.
- குளிக்கப் போகின்றவர்கள் சேற்றைப் பூசுகின்றனராம்.
- அந்தக் காலத்திற்றான் இந்த அக்கப்பாடாம்.
- இந்தக் காலத்தில் குழாய் நீர் இருக்கின்றதாம்.
- குழாய் நீரில் சேறு இல்லையாம்.
- கொழும்பிலே குழாய் நீர் உண்டாம்.
- அதிற் குளித்தாற் சேறு பூச முடியாதாம்.

## ஆலய விசாரணைச் சபை அறிக்கை

### சைவர்களின் பேராதரவு

தேவரையாளிச் சைவ கலைஞானசபையின் பொதுக் கூட்டமொன்று சென்ற 29-6-51-ல் தேவரையாளிச் சைவ வித்தியாசாலையிற் சபைத்தலைவர் திரு. வா. சி. சிலம்பு அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக் கலைஞான சபை இற்றைக்கு 35 வருடங்களின்முன் வதிரி, அல்வாய், கொற்றாவத்தை, கரவெட்டி என்னும் கிராமங்களில் உள்ள பள்ளர் சமூகத்தைச் சார்ந்த சைவ அபிமானிகளால் ஸ்தாபிக்கப்பெற்றது. இச்சபையினரால் தேவரையாளிச் சைவ வித்தியாசாலை 30 வருடகாலமாக நடைபெற்று வருகிறது.

இச்சபையார் சைவாலய விசாரணைக் குழுவினருக்கு விண்ணப்பம் சமர்ப்பித்ததுமன்றிச் சாட்சியமும் கூறினர். விசாரணைச்சபை அறிக்கையிற் சீர்திருத்தத்திற்குச் சார்பான சாட்சியங்களே பெரும்பான்மையாக இருக்கவும் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு சில சைவர்கள் அரசியற் கட்சி விரோதங்காரணமாகவும், சுயநலத்துக்காகவும் சைவம் கெட்டுவிட்டதென்று துர்ப்பிரசாரம் செய்துவருகின்றனர். அகண்ட இந்தியாவில் அழிக்கொழியாத சைவசமயம் அணுவளவான யாழ்ப்பாணத்தில் அழிந்துவிடும் என்று சொல்வது ஆச்சரியமாகும்.

இத்தகைய கருத்துக்கள்பற்றி பண்டிதர் திரு. மு. செல்லையா வைத்தியர் திரு. மு. வ. முருகேசு, சைவப் பெரியார் திரு. க. சூரன், ஆசிரியர் திரு.கீ. சுப்பிரமணியம், சைவப்புலவர் திரு. சி. வல்லிபுரம் ஆதியோர் பேசினர். தீர்மானங்கள் பல ஏகமனதாகநிறைவேற்றப்பட்டன அவற்றுட் சில வருமாறு.

1. ஆலய பரிபாலனச் சட்டத்தை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்று உள்நாட்டு மந்திரியார் அவர்களை இச்சபை வேண்டிக்கொள்ளுகிறது.

2. சகல இந்து ஆலயங்களிலும் பேதமின்றி ஹரிஜனங்கள் பிரவேசித்து வணங்கவும் ஆலயங்களில் உயிர்ப்பலி இடுதலைத் தடுக்கவுங்கூடியதான சட்டதிட்டங்களை ஆக்குதற்குரிய பிரேரணையை இலங்கைப் பாராளுமன்றத்திலுள்ள இந்துப் பிரதிநிதிகள் எடுத்தாண்டு நிறைவேற்றவேண்டுமென்று இச்சபை அப் பிரதிநிதிகளை வேண்டிக்கொள்ளுகின்றது.

3. வடமாகாணந் தவிர்ந்த மற்றைய மாகாணங்களில் உள்ள சைவாலயங்களில் ஹரிஜனங்கள் பிரவேசித்து வணங்கும் வழக்கம் பலவருடங்களாகவே இருந்து வருகிறது. (இவற்றுட் பலவற்றின் அர்ச்சகர்களும் நிர்வாகிகளும் யாழ்ப்பாணத்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.) ஆகையாற் சட்டம் ஆக்கப்படுதற்கு முன்னரே ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேச உரிமை அளிக்குமாறு வடமாகாணத்திலுள்ள சைவ ஆலயநிர்வாகிகளை இச்சபை அன்பாக வேண்டிக்கொள்ளுகிறது.

### தேசிய நூதன சாலை யாழ்ப்பாணம்

சரித்திரம், இலக்கியம், சமயம், கலை சம்பந்தமான பழைய ஏட்டுப் பிரதிகள் இருப்பின் அவற்றை யாழ்ப்பாணம் நூதனசாலைக்கு அனுப்பி வைக்கலாம். விலாசம்: பொறுப்பாளர், தேசிய நூதனசாலை, பெரியதெரு யாழ்ப்பாணம்.

### ஸ்ரீ ஆர். திருநாவுக்கரசு வதுளையிற் பிரிவுபசாரம்

வதுளையில் வித்தியாதரிசியாகக் கடமையாற்றிய ஸ்ரீ ஆர். திருநாவுக்கரசு அவர்கள் கொழும்புக்கு மாறிப் போவதை முன்னிட்டு ஒரு பிரிவுபசாரக் கொண்டாட்டம் வதுளை நகரசபை மண்டபத்தில் 23-6-51 சனிக்கிழமை நடைபெற்றது.

ஸ்ரீமான் கே. வி. நடராசா எம். பி. கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். பல ஆசிரியர்களும, வித்தியா தரிசியவர்களின நண்பர்களும் கொண்டாட்டத்திற பங்கு பற்றினர்.


~~ காங்கேசன்துறையில் ~~

திறமான ஜெர்மன் சீமேந்து, மலையாளம் கொழுக்கி ஓடுகள், செங்கல், பயர்ஸ்ரோன் ரயர், ரீப்புகள் மற்றும் பலசாய்ப்புச் சாமான்களும் விலை சகாயமாய்க் கிடைக்குமிடம்:—

நியூகோ ட்ரேடிங் கம்பனி

காங்கேசன்துறை

தந்தி விலாசம்: "நியூகோ" :: டெலிபோன்: நம்பர் 25

[4344]

சகல பயிர்களுக்கு

C C C பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில் 40 வருடகால அனுபவத்தின் பயனாக

நாங்கள்

C C C

கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி, லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

The Colombo Commercial Company, LIMITED.

INCORPORATED IN GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4337]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இப்போது வட இலங்கையில் உள்ள நாம் இந்தியாவைத் தாய்நாடாகக் கருதுகின்றோம் அல்லவா?

# நன்செய் வனம்

## சுவீடின் சிறப்பு

ஐரோப்பா — — யாத்திரை

வழக்கறிஞர் :
அ. அருளம்பலம்

சுவீடினின் தலைநகரம் ஸ்ரொக்ஹோம். கொதென் பேர்க்கிலிருந்து ஸ்ரொக்ஹோமுக்கும் புகைவண்டிமார்க்கமாகப் பிரயாணம் செய்தேன். புகைவண்டி யென்று சொல்வது சரியல்ல. மின்சார றெயில் வண்டி யென்றே கூற வேண்டும். சுவீடினில் முக்கியமான பாதைகளில் எல்லாம் மின்சார றெயில் வண்டிகளே ஓடுகின்றன. இவை சுத்தமான அழகான வண்டிகள். மூன்றும் வகுப்புக்கூட சௌகரியம் உடையதாக இருக்கின்றது. சுத்தமான தண்ணீரைக் குடிப்பதற்காக ஒவ்வொரு றெயில் பெட்டியிலும் கண்ணாடிக் கூசாக்களில் வைத்திருக்கிறார்கள். தண்ணீர் தேவையானவர்கள் இக் கூசாக்களின் அருகில் அழகாக அடுக்கிவைக்கப் பெற்ற காகிதப் பேணிகளை உபயோகிக்கின்றனர். ஒருவர் ஒரு பேணியை உபயோகித்தால் வேறொருவரும் அதை உபயோகிப்பதில்லை. தண்ணீர் குடித்து முடிந்ததும் அழுக்கடைந்த கடுதாசிகள் போடும் கூடையில் இப் பேணிகளை எறிந்து விடுகின்றனர். நல்ல காகிதப் பேணிகளுக்கு சுவீடினிலுள்ள புகைபிரதங்களிற் பஞ்சமில்லை. காரணம் என்ன வென்றால், சுவீடின் தேசம் காகித உற்பத்திக்குத் தலைசிறந்த நாடாக இருப்பதேயாம். சுவீடின் தேசத்தின் பெரும்பாகம் காடு நிறைந்துள்ளது. காடு என்றவுடன் நமது இலங்கையிலுள்ள காடே மனதில் தோன்றும். ஆனால் சுவீடினிலுள்ள காடு மனிதனால் ஆக்கப் பெற்ற நன்செய் வனம். இதைச் சீர்ப்படுத்தி வளர்த்து அத்தேசம் பெரும் பொருள் ஈட்டுகின்றது. காட்டு மரங்களைப் பலகையாக்கியும் ஒருவித மென்மையான மரங்களை உபயோகித்து அச்சிடும் காகிதம் முதலியன உற்பத்தி செய்து பல தேசங்களுக்கனுப்பியும் இத்தேசத்தவர்கள் பொருள் சம்பாதிக்கின்றனர்.

### எனது மகிழ்ச்சி

ஸ்ரொக்ஹோம் சேர்ந்ததும் எற்கனவே ஒழுங்கு செய்யப்பெற்ற விருந்தினர் நிலையத்துக்குச் சென்றேன். பிற்பகல் நாலுமணியானதும் சூரிய வெளிச்சத்தைக் காண முடியவில்லை. கார்த்திகை, மார்கழி, தை, மாசி மாதங்களில் இத் தேசத்தில் பகல் மிகக் குறைந்தும் இரவு நீடித்தும் இருக்கின்றது. காரணம் இத் தேசம் அதிக வடக்கே இருப்பதேயாம். விருந்தினர் நிலையத்தில் இராப்போசனம் அருந்தச் சென்றேன். என்னை அவர்கள் ஓர் இந்தியனுகக் கருதி நான் உணவு அருந்த இருந்த மேசையில் ஓர் இந்திய தேசியக் கொடியைக் கொண்டுவந்து வைத்தார்கள். மூவர்ணமும் அசோக சக்கரமும என் முன் துலங்கின. எனக்கு உண்டாய சந்தோஷத்திற்கு எல்லையில்லை.

இப்போதும் வட இலங்கையில் உள்ள நாம் இந்தியாவைத் தாய்நாடாகக் கருதுகின்றோம் அல்லவா? மகாத்மா காந்தி அடிகள், பண்டித நேரு முதலாக ஊரும் பேரும் உலகமே அறியாத எத்தனை மக்கள் ஆசியாவின் சுதந்திரத்திற்குப் போராடினார்கள். அவர்களின் தியாகமே எனக்கு அவ்வளவு மரியாதையைப் பெற்றுத் தந்தது என்று நினைந்து நினைந்து உள்ளம் பூரித்தேன். பின் விருந்தினர் நிலையத்தில் உள்ளவர்கள் நான் இலங்கையில் இருந்து வந்தவன் என்பதையும் இலங்கை இன்று ஓர் தனிக் குடி அரசு நடத்துகிறது என்றும் அறிந்து சீக்கிரம் இலங்கையின் சுதேசியக் கொடியைத் தாம் பெற்று வைப்பதாகவும் கூறினார்கள். உலகம் ஒரு கொடியின் கீழ் வரவேண்டும் என்றும் அது கூட்டுறவுக் கொடியாக இருந்தால் உத்தமம் என்றும் கூறினேன்.

### கூட்டுறவு ஆலைகள்

சுவீடினில் தங்கியிருந்த ஒரு வாரத்திலும் பல கூட்டுறவுச் சங்கங்களைப் பார்வையிட்டேன். அங்கே உள்ள கூட்டுறவு இயக்கத்தை விரிக்கிற் பெருகும். சுருக்கமாகக் கூறின் சுவீடினிலுள்ள எழுபது இலட்சம் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்திருக்கின்றார்கள். அங்குள்ள பண்டகசாலைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு மொத்த வியாபார ஸ்தாபனத்தை திறம்பட நடத்துகின்றன. இந்த ஸ்தாபனம் சொந்தமான பல ஆலைகளை நிறுவிப் பொருள்களை மக்கள் நியாயமான விலைக்குப் பெறத்தக்கனவாகச் செய்திருக்கின்றன. தனித்த வியாபாரிமாரும் பெருத்த முதலாளிகளும் பொருள்களைத் தாம் நினைத்த விலைக்கு விற்றபோது கூட்டுறவு ஆலைகள் பல பொருள்களை ஏராளமாக உற்பத்தி செய்து விலைவாசியை மட்டுப்படுத்தின. சுவீடினில் கூட்டுறவு முறையில் தொடங்கப் பெற்ற தீப்பெட்டி ஆலை, மின்சார விளக்குகள் செய்யும் ஆலை, பாண்சாலை, பசளை செய்யும் ஆலை முதலியன அத்தேசத்தவருக்கும் அயல் நாடுகளுக்கும் செய்த உதவி சிறிதல்ல.

—தொடரும்.

# தமிழ்ச் சிவஞானபோதம்

வே. விசுவலிங்கம்

**புத்த சமயமும் சமண** சமயமும் கிறீஸ்து பெருமான் பிறப்பதற்குமுன் வட இந்தியாவில் தோன்றி அங்கு பரவியபிடத்தும் இச் சமயக் கோட்பாடுகள் தென்னிந்தியாவைத் தாக்கத் தொடங்கிய காலம் கி. பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டுவரையாகும். கடவுளும் உயிரும் இல்லாத வெறும் பாழெனக் கூறும் ஈனமான பௌத்தம் சான்றோரால் கைக்கொள்ளப்படாமல் ஒடுங்கிப் போக, சைவ சமயக் கோட்பாடுகளைத் தழுவி வகுக்கப் பெற்ற மகாயான பௌத்தம் யாண்டும் பரவி வழங்கலாயிற்று. இக்காலத்தே தான் பௌத்தாகமங்களைப் போன்ற சைவாகமங்கள் எழுதப்பட்டுப் பௌத்த சமயக் கோட்பாடுகளை மறுத்துச் சைவசமய உண்மைகளை அளவு நூல் முறையால் தொடர்பு படுத்தி விளக்குவவாயின.

பௌத்த சமண மறுப்புரைகளை எதிர்த்துக் கடவுளுண்மையை நாட்டப் புகுந்த, ஆகமம், திருவாசகம், திருமந்திரம், ஞானமிர்தம், தேவாரம், சிவஞானபோதம் முதலான தமிழ் நூல்களெல்லாம் கி. பி. முதல் நூற்றாண்டிற்குப் பின் அடுத்தடுத்துத் தோன்றுவவாயின. கிறீஸ்து பிறப்பதற்குமுன் தோன்றிய தமிழ் நூல்களெல்லாம் இயல் இசை நாடகங்களைப்பற்றிய தொல்காப்பியம், பரிபாடல், முறுவல் முதலியனவும், அறம் பொருள் இன்பங்களை விளக்கும் திருக்குறள் நாலடியார், அகநானூறு, புறநானூறு, கலித்தொகை முதலியனவுமாம். இந்நூல்களில், கடவுள், உயிர், மலம் என்னும் முப்பொருள் பற்றிய உண்மைகள் உண்மைகளாகவே சொல்லப்பட்டனவேயன்றி ஆராய்ச்சி முறைகள் சிறிதுங் கைக்கொள்ளப்பட்டில. ஏனெனில் இவ்வுண்மைகளைப் பௌத்தம் சமணம் பிறக்குமுன் ஆட்சேபித்தவர்கள் இன்மையால்.

ஆகம நூல்கள் பௌத்த மதம் தமிழ் நாட்டிற் பரவிய கி. பி. முதல் நூற்றாண்டு தொடங்கி இயற்றப்பட்டமையால் அவற்றின் மொழிபெயர்ப்பாய் இஞ்ஞான்று உலவும் 'பௌட்காம்' முதலிய ஆகம நூல்களில் பௌத்த மத மாயாவாதக் கொள்கைகள் எடுத்து மறுக்கப்படுகின்றன. சிவாகமங்கள் பௌத்தமத காலத்தில் தோன்றி மிக்கு வழக்கிலிருந்தமையால் தான் அக்காலத்திலிருந்த மாணிக்கவாசக சுவாமிகள் தாம் அருளிய திருவாசகத்தில் ஆகமங்களைப்பற்றி அடுத்தடுத்துக் குறிப்பிடுவாராயினர். பௌத்த காலத்திற்குப் பின் சமணமதம் தலை எடுத்து அக்காலத்திலிருந்த தமிழ்ச் சிவாகமங்களைத் தீக்கிரையாக்கினமையின் சமணர் காலத்தில் ஆகமங்கள் வழங்காதொழிந்தன. திருநாவுக்கரசுநாயனரைக் கடலில் வீழ்த்தியும் நீற்றறையில் இடுவித்தும் பல கொடுந் தொழில்களால் கொல்லமுயன்ற சமணர்கள் 'சிவாகம நூல்களை'த் தப்பிப் பிழைக்க விடுவார்களா? திருஞானசம்பந்தப் பெருமானையும் பல்லாயிரம் அடியார்களோடு வைத்துத் தீயிட்டுக் கொளுத்திய அச்சமணர்கள் சிவாகம நூல்களைக் கொளுத்தாமல் விட்டிருப்பார்களா? சம

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

# ஆடுகள் புலம்பல்

— கா. மா. —

பூமிதனி லெமைப்படைத்த பூவி லோனைப்
போற்றுவதோ தூற்றுவதோயாதுசெய்வோம்
நாமுமவன் படைப்பினிலே ஓர்பா லையா.
நானிலத்தி லுதித்தவுடன் நம்ம னோரின்
சேமமதை உன்னியுன்னிச் சிந்தை கொண்டு
திறம்படவு முணவளித்துச் சிறூரே போன்று
நாமமுமே சூட்டியெம்மை வளர்ப்போர் தம்மை
நல்லவரென் றேத்திடநாம் நாணு வோமே

அன்னவரெம் வயிறுகொளு முணவுதா ராது
அழுகையையு மெண்ணாது செவிவாய் பற்றி
இன்னலுறப் பெருமுணவு திணித்து நீரை
ஈரிரண்டு போத்தல்வரை பருக்கி யெங்கள்
நன்னலத்தை நோக்கினர்போல் நாளுஞ் செய்வார்
நம்முடலின் பூரிப்பை நச்சி நச்சிப்
பன்னலமுந் தரும்மக்கட் பேணல் விஞ்சப்
பக்குவமாய் வளர்ப்பதனைப் பகர லாமோ. 2

வேறு

காளிகட்குங் கறுப்பருக்குங் கண்டகண்ட
பேய்களுக்குங் கருணை யின்றிக்
கூளிகட்கு முயிர்ப்பலியை ஈவதென
எங்குலத்தை அழிக்க அந்தோ!
நாளுமிந்த மானிடரின் நஞ்சனைய
கொள்கையது நானி லத்தில்
வாழுமுறை நன்குவரு மெனவெண்ணி
எமைவதைக்க வேள்வி யன்றோ! 3


வேறு

அணிகலமு மணிந்துபல மாலை சூட்டி
அன்பில்லா ரியங்களொடும் பாட லோடும்
துணிவுடனே கோடுபற்றிச் செவியும் பற்றிச்
சுந்தரமாய் நடத்திவந்து களமே காட்டிக்
கனிவில்லா ரெங்கள்குலக் காட்சி காட்டிக்
கத்திதனைப் பேய்கொண்டான் கைய ளிக்க
வினைவிளைக்கும் படுபாவி ஒருவன் பெற்று
வீரனைப்போல் வதைக்க என்ன கொடுமை
[செய்தோம்! 4

வேறு

படுகொலையைக் கண்டுமனம் பதைபதைத்தே
அஞ்சியழ
வடமெடுத்துத் தலைகாலை வலிமையுட
னிழுத்தொழிக்கும்
கொடுமையினை அறியீரோ குவலயத்தீர்!
குவலயத்தீர்!!
நடுவுநிலை வேண்டுகின்றோம் நமைக்காக்க
வாரீரோ! 5

அலறிவிழும் நிலைகண்டும் அருள்சுரத்த
லினுமிலையோ
அளறணுகல் அறியீரோ! அதுவுமிங்கு
பொய்யாமோ!!
செயலொழித்துப் புண்ணியமும் சிவநெறியும்
தழைத்தோங்கும்
நிலையுன்னி எமைக்காப்பீர் நித்தமும்யாம்
வேண்டுதுமே! 6



# இலக்கிய மஞ்சரி

4-ம். 5-ம், 6-ம் புத்தகங்கள்

பாடசாலைகளில் இலக்கிய பாடமாக, நான்காம், ஐந்தாம், ஆறும் வகுப்புகளுக்கு உபயோகிக்கக்கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| விலை : 4-ம் புத்தகம் | ... 50 | சதம் |
| 5-ம் ,, | ... 60 | ,, |
| 6-ம் ,, | ... 75 | ,, |

சுன்னுகம்: [illegible]

புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம். இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஈழகேசரி
சுன்னுகம், கரஙுல ஆனி உச
— காந்தி ஆண்டு 82 —
பேசக் தந்தி இல. 805

## கோரியாப் போர்

கோரியாவில் யுத்தம் ஏற்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது. இப்போது இந்த யுத்தத்தை நிற்பாட்டிச் சமாதான ஒழுங்குகளைச் செய்ய எத்தனங்கள் கையாளப்படுகின்றன. வட கோரியருக்கும் சீனருக்கும் உதவி புரிந்து யுத்தத்தை உக்கிரமாக்கிய ருஷியாவே இப்போது மிக ஆவலுடன் யுத்தத்தை நிற்பாட்டவேண்டுமென முனைந்து நிற்கின்றது. ருஷியருடைய தந்திரங்களிற் பொதுவாக எவருக்கும் நம்பிக்கையே கிடையாது. என்ருலும் சமாதானத்தை விரும்பி நாடும்பொழுது அதற்கு முட்டுக்கட்டையாக நிற்பது துரோகமல்லவா? ஐக்கிய நாடுகள் சங்கத்தில் ருஷியாவின் பிரதிநிதியாகக் கடமையாற்றும் ஜேக்கப் மலிக் என்பவரே இவ் விஷயத்தில் மிக்க அக்கறைகாட்டினர். தென் கோரியாவிலுள்ள கேஸோங் என்ற இடத்திற் சமரசப் பேச்சுக்கள் இருபகுதியாருக்குமிடையில் நடைபெறுகின்றன. இந்த ஆலோசனை நன்மையாக முடியின் யுத்தம் முடிவடையக்கூடும்.

இக்கோர யுத்தம் ஒரு வருடமாக நடைபெற்ற பின்னர்தான் இரு பகுதியினருக்கும் நல்லறிவு வந்தது. எத்தனை இலட்சம் மக்கள் உயிர் விட்டனர்? அழிந்த நாடுகள் கட்டடங்கள் எத்தனை? ஏற்பட்ட நட்டங்கட்கு எல்லையுண்டா? ருஷியரின் தூண்டுதலாற்ருன் வட கோரியரும் சீனரும் இந்த யுத்தத்தில் ஈடுபடலாயினர். இப்போது அவர்கள் அடைந்த நட்டத்தை யாவர்தான் ஈடுசெய்ய வல்லார்? சீனரும் வட கோரியரும் காட்டிவந்த இறுமாப்பு இவ்வளவன்று. யுத்தம் நிற்பாட்டப்பட வேண்டின் அமெரிக்கர் கோரியாவை விட்டு விலகவேண்டும். போமோஸா என்ற தீவு சீனரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். கொம்யூனிஸ்ட் சீனத்தின் பிரதிநிதி ஐக்கிய நாடுகள் சங்கத்தில் ஸ்தானம் பெற வேண்டுமெனப் பிடிவாதமாகக் கேட்டவர்கள் இப்போது இக்கேள்விகளைப் பற்றி ஒன்றும் பேசாது நீதியான சமாதானத்துக்குத் தயாரென்று கூறுவது பெரிய ஆச்சரியமாகின்றது.

ஐக்கிய நாடுகள் படைகளின் அதிகாரி மாக் ஆர்தர் இப்போதிருந்திருப்பின் இவ்வித யுத்தநிறுத்தம் ஒருபோதும் வந்திருக்கமாட்டாது. நியாயமானமுறையில், இரு கட்சியினரும் அகௌரவம் அடையாதவாறு சமாதானம் கிடைக்குமென்ற நம்பிக்கை ருஷியருக்கு உண்டாயிற்று. அத்துடன் யுத்தத்தை மேன் மேலும் நடாத்திச்சென்ருல் இன்னும் மேலதிகமாகத் தீமைகளும் நட்டங்களும் வந்துசேருமென இவர்கள் நம்பினர். நிரந்தரமான சமாதானத்தை நிலைநாட்டச் சீனரும், வடகோரிய மக்களும் இணங்கினுற்ருன் இப்போது ஏற்படும் யுத்த நிறுத்தம் நன்மையை உண்டாக்கும் அன்றேல் யுத்தம் மறுபடியும் மூண்டு அளப்பருந் துயரையே உண்டாக்கும். பின்வரும் பிரேரணைகளுக்கு வட கோரிய அரசினர் இணங்கினுற்ருன் யுத்தம் நிற்பாட்டப்பட இடமுண்டு. 1. வட கோரியாவின் ஆக்கிரமிப்புக்கு எல்லைகாணவேண்டும். 2. மறுபடி யுத்தம் ஆரம்பிப்பதில்லையென உறுதி கூற வேண்டும். 3. தென்கோரியாவினைப் பலவந்தமாகத் தன் ஆதிக்கத்துக்குள் கொண்டுவர முயலக்கூடாது. இவ்விஷயத்தில் ஐக்கிய நாடுகள் சங்கம் உறுதியாகநிற்கவேண்டும். தமக்கிடையில் ஏற்படும் வேற்றுமைகள் பிணக்குகள் என்பனவற்றை ஐக்கிய நாடுகள் சங்கத்தின் உதவியால் தீர்த்துக்கொள்ளாது சர்வதேச ஒழுங்குகளை மீறி யுத்தஞ்செய்யும் நாடுகளுக்கு ஏற்ற தண்டனை விதிப்பது மிகவும் அவசியம்.

கோரியா விஷயமாக நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் தென்கோரியாவின் சனநாயக அரசியலை வடகோரியரும் கொம்யூனிஸ்ட் சீனரும் ருஷியரும் அங்கீகரிக்க வேண்டும். பலவந்தமாக இரு கோரியாப் பிரதேசங்களையும் இணைக்க எண்ணுதல் ஒருபோதும் நடந்தேறக்கூடிய விஷயமன்று. கோரிய மக்களின் விருப்பப்படியே இவ் விஷயம் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். அத்துடன் அமெரிக்காவும் தனது ஆதிக்க ஆசையைக் கைவிட்டு உலக சமாதானத்தை நிலைநாட்ட முயற்சிக்கவேண்டும்.

## வாசகர்களுக்கு :

கடதாசியின் விலை காளாந்தம் உயர்ந்து கொண்டே வருகின்றபடியால் ஈழகேசரியை அதிக பக்கங்களுடன் வெளியிடுவது இயலாதாகின்றது. பக்கங்களைக் கூட்டுவதாயின் பத்திரிகையின் விலையையும் உயர்த்த வேண்டும். இதனை நாம் விரும்பவில்லை. எனவே, பக்கங்களைக் குறைத்துள்ளோம். இந்த நிலைமை நீடிக்கப் போவதில்லை. அது வரை வாசகர்கள் பொறுமையாக இருப்பதுடன் பத்திரிகையையும் ஆதரித்துவருமாறு வேண்டுகின்ருேம்.

—அதிபர்.

## யூனியன் கல்லூரி

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி விழா இம் மாதம் 7-ந் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

**CHANGE OF NAME**

This is to inform the Ceylon Government and the general public, that my son, known as Balabisekasubramaniyam and who is studying in the Kokuvil Hindu College, will be known hereafter as Balenthiran and shall sign his name as K. Balenthiran.

K. Kandiah

Kilinochchy Stores,
Kilinochchy, 6-th July, 1951

[4330]

## வீதிச் சந்தில் — பாட்டைசாரி

பர்மா அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் போன்ற வெளிநாடுகளிலிருந்து அரிசி, கோதுமை மா, சீனிபோன்ற உணவுப் பொருள்கள் கொழும்புக்குவந்த வண்ணமாகவேயிருக்கின்றன. இவை யாவும் பொதுமக்களின் பசிக் கொடுமையை நீக்குமோ அன்றேல் கள்ளச் சந்தைகளுட் புகுந்து அங்குள்ளவர்களின் அசுர இச்சைகளை நிறைவேற்றுமோ யார் கண்டது.

❁

### கோரியா பரிதாபம்

கோரியாவிற் சமாதானம் ஏற்படும் போலத் தோன்றுகின்றது. அங்கு யுத்தம் மிக உக்கிரமாக நடைபெற்ற போது நேருஜி சமாதானத்தின் அவசியத்தை வற்புறுத்தினுர். அமெரிக்காவின் வரட்டுக் கௌரவம் அதற்குச் செவி சாய்க்க மறுத்துவிட்டது.

சமீபத்திற் கோரியாபற்றிப் பேராசிரியர் இராதாகிருஷ்ணன் பேசும்போது, ஒரு கொள்கையில் நியாயமிருக்கின்றதென்பதைக் காட்டுவதற்காக ஒரு நாட்டுமக்களையே அழித்துவிட்டோம் எனக்கூறினுர். ஏகாதிபத்திய வெறியர்களுக்கு இந்தத் தத்துவம் எங்கே விளங்கப் போகின்றது?

❁

### "பனிக் கூழ்"

சமீபத்திற் கொழும்பில் நடைபெற்ற சட்டக்கல்லூரி மாணவரின் விருந்தில், இரசபானம், கடற்கரும்பு, சேவற் செம்பாகு, பனிக் கூழ், கரும்பொடிப்பானம், என்ற அமுத வகைகள் வழங்கப்பட்டன. இதை எழுதும்போதே நாவில் எனக்கு ஜலம் ஊறுகின்றது.

அடுத்த வருட நளபாகத்தில் அச்சரக்கூடும், பச்சிலை நாவியும் கௌரவமான இடங்களைப் பெறுமென நம்புகின்றேன்.

❁

### பொது அறிவுப் பயிற்சி

இவ்வாரமும் உங்கள் மூளைக்கு வேலை தருகின்றேன்.

8. வித்துவான், புலவர், நாவலர் சங்கீத பூஷணம் பட்டங்களை வழங்குங் கழகங்கள் எவை?

9. யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக நிறுவப்பட்ட அச்சுக்கூடம் எது? எப்பொழுது நிறுவப்பட்டது?

10. யாழ்ப்பாணத்தில் இருந்த நாவலர்கள் இருவரின் பெயர்களைத் தருக.

11. 'ஆம்' என்று அல்லது 'இல்லை' என்று எழுதுக.

i. ர, ழ என்பன வற்றை யாழ்ப்பாணத்தவர்கள் சரியாக உச்சரிப்பதில்லை.

ii 'சிங்களம்' என்னும் சொல் விஜயன் வருவதற்கு முன்னும் வழங்கியது.

12. யாழ்ப்பாணத் தமிழ் விழாப்பந்தரின் அகல நீளம் என்ன?

# புதுமைப்பித்தன் பணி

புதுமைப்பித்தன் மேதையை அறிந்துமெய் சிலிர்த்துப் போனேன் என்று கல்வி மந்திரி கனகரத்தினம் அவர்கள் கொழும்பு விவேகானந்த சபையில் நடைபெற்ற புதுமைப்பித்தன் நினைவு நாள் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டிருந்தார்.

இக் கூட்டத்துக்கு முக்கியமான இலக்கிய அன்பர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் பிரசன்னமாயிருந்தனர். இலங்கை வானொலிப்பகுதித் தமிழ்நிகழ்ச்சி அதிகாரியான சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் பேசும்போது புதுமைப்பித்தன் தமிழ்நடைக்கு ஒரு புதுவளமும்ஒருபுதுமெருகும் தந்திருக்கின்ருர் எனத் தமக்குரித்தான இலக்கியச் சுவையுடன்பேசியிருக்கின்ருர்.

வீரகேசரி ஆசிரியர் ஹரன் அவர்களும், சுதந்திரன் ஆரியர் சிவநாயகம் அவர்களும் உணர்ச்சி ததும்பப்பேசியிருப்பதுடன் எழுத்தாளர்களின் எதிர்கால வாழ்க்கை சிறப்படைய வேண்டுமென்ற சிறந்த நோக்கத்துடனும் பணியாற்றி வருகின்றனர்.

புதுமைப்பித்தன் பழமையில் மிகுந்த பற்றுடையவர். அவர் சங்க இலக்கியங்களை நன்கு ஆராய்ந்திருந்தபடியாற்ருன் புதுமைக்கு மெருகு கொடுக்கமுடிந்தது. இதை எந்த இலக்கிய மன்னனும் ஆட்சேபிக்க முடியாது.

ஆகவேதான் புதுமைப்பித்தனைப் பாரதிக்குப் பின் வந்த இலக்கிய மேதை என்று தமிழ்நாடு போற்றி வருகின்றது.

இத்தகைய ஒரு மேதை வறுமையில் வாடி அகால மரணமானார். எனவே அவருடைய மனைவிக்கும் குழந்தைக்கும் ஈழத்துத் தமிழ் அன்பர்களுந் தாராளமாக உதவ வேண்டுமெனக் கல்வி மந்திரி கனகரத்தினம் அவர்கள்கேட்டுக்கொண்டார்கள்.

சென்னையில் நடைபெற்ற கூட்டத்திற் கல்கி ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது, புதுமைப்பித்தன் குடும்பத்தைத் தமிழர்கள் நிராதரவாகவிட்டனர் என்ற பழிச்சொல் ஏற்படாதவண்ணம் சகலரும் உதவிசெய்யவேண்டுமென்ருர்.

கொழும்பிலே கல்வி மந்திரி கனகரத்தினம் அவர்களின் தலைமையில் நிதி சேர்ப்பதற்கான ஒரு சபை அமைக்கப்பட்டிருக்கின்றது. திருவாளர்கள் கே. பி. ஹரன், வி. கே. பி. நாதன், எஸ். டி. சிவநாயகம், சோ. சிவபாதசுந்தரம், ஆ. குருசாமி, எஸ். எம். கமால்தீன், வீரசுப்பிரமணியம், ஆர். எம். நாகலிங்கம், ஆர். ஆவுடையப்பபிள்ளை என்பவர்கள் அச்சபையின் அங்கத்தவர்களாக விருந்து உழைத்து வருகின்றனர்.

நிதி திரட்டுவதற்கான திட்டங்களை வகுத்துக்கொண்டிருப்பதாக அன்பர் குருசுவாமிஎழுதியுள்ளார். குருதேனியா அன்பர்ஒருவர் கூட்டம் நடைபெற்ற தினத்தன்றே ரூ. 25. நிதிக்கென வழங்கியிருந்தார்.

யாழ்ப்பாணத்திற் புதுமைப்பித்தன் ஞாபகக் கூட்டம் பெரியகடை பாரதி பாஷிய வித்தியாலயத்தில் இம்மாதம் 7-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்குக் கூடுகின்றது. அன்பர்களின் பேராதரவு அனைவருக்கும் மிகுந்த உற்சாகத்தை ஊட்டி வருகின்றது.

— அரியரத்தினம்

## வானிசை

● வசந்தன் ●

### கொழும்பு வானொலி

**25-6-51**

திரு. எஸ். அரியநாயகம்

புல்லாங்குழல் — இலங்கையிலே புல்லாங்குழலைக் கையாளும் வித்துவான்கள் பலர் இருக்கின்றனர். இவர்களுட் பெரும்பகுதியினர் விரலடி வீரர்களும் அபஸ்வரப் பிரகஸ்பதிகளுமாவர். இக்கோஷ்டியைச் சேராத சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவர் திரு அரியநாயகம். அன்று தனக்குத் தெரிந்தவற்றைச் சீராக வாசித்தார். பஞ்தாரி நன்ருக இருந்தது. வந்தனதாரிணி இராகத்தை இன்னும் நன்ருக வாசித்திருந்திருக்கலாம். சரஸ்வதிஇராகச் சாயலை மறைக்க முயற்சித்திருக்கவேண்டும். கற்பனுசுரங்கள் வாசிப்பதை இன்னும் விருத்திசெய்யமுயலவேண்டும்.

**26-6-51**

திரு. கே. தாமோதரம்பிள்ளை

இவர் 'தமிழ் மணம் கமழ வேண்டும்' என்பதைத் 'தமிழ் மணம் கமள வேண்டும்' என்று பாடினுர். மணிரங்கு இராகத்தைப் பாட முயற்சியாதிருந்தால் நன்ருயிருந்திருக்கும். பாட்டுக்களை நன்கு சாதகம் செய்யாமற் பாடினுர். இவர் சங்கதிகளைப் போடும்பொழுது தாளம் தவறுகிறது. எனவே, பக்கவாத்தியகாரர் திண்டாடவேண்டி யிருக்கின்றது. மணிரங்கு இராகத்தில் அவரோகணத்திற் போட்ட சங்கதி ஒன்றில் சப்த சுரங்களும் கேட்டன. அதை அவர் கவனிக்க வேண்டும். இவருடைய சாரீரம் சுருதியில் சேரமாட்டாமற் கோளாறு பண்ணுகிறது.

பிலகரியில் 'இனி நமக்கொரு கவலையுமில்லை' என்று பாடினுர். எங்களுக்கு இவர் நன்ருகப் பாடவேண்டுமே என்ற கவலைதான். பாடாந்தரம் தெளிவாயில்லை. பாவமும் அப்படியே. கற்பனுசுரங்களைக் கரடு முரடாகப் பாடினுர். இடையிலே ஒரு சிட்டைஸ்வரம் பாடினுர். கற்பனு சுரங்கள் பாடக் கூடிய கிருதிகளுக்கு சிட்டைஸ்வரம் பெரும்பாலும் வேண்டியதில்லை.

இவருடைய கச்சேரியில் மற்றுமிரு கச்சேரிகள் நடைபெற்றன. ஒன்று வயலின் கச்சேரி. மற்றையது மிருதங்கக் கச்சேரி. இருவரும் தங்கள் கைவரிசைகளைக் காட்டித் தங்கள் பெயர்களைக் காப்பாற்றினுர்கள்.

திரு. ஜி. சண்முகானந்தம்

இவருடைய வயலின் கச்சேரி நடைபெறவில்லை. வயலின் இசைத்தட்டுகளைக் கேட்டோம்.

**27-6-51**

திரு. எல். குருசாமி

நாகசுவரம் — இவருக்கு ஞானமிருந்த போதிலும் வாத்தியத்திற் குழுமையை உண்டாக்கும் முறை தெரியவில்லை. உசேனி இராகத்தை வாசிக்கும்போது முகாரி இராகமே களைகட்டிக்கொண்டிருந்தது. எனவே, இறுதியில்இராக இரஞ்சகம் ஏற்படவில்லை. ஹேமவதிச் சுரங்களில் இராக பாவம் ததும்பவில்லை.

திருமதி சரஸ்வதி பாக்கியராஜா

ஆரம்பத்திற் சாரீரங் கணீரென்றிருந்தது. தேவ

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ காஷ்மீர் விஷயமாக முடிவு செய்யும் உரிமை தனித்த ஒருவர் பொறுப்பில் விடக்கூடாது.

# பிழையான ஆட்சி

## பிரஜாகட்சி ஆரவாரம்

### இந்தியா

காஷ்மீர் விஷயத்தை ஒழுங்குசெய்யும்படி நியமனம் பெற்ற டொக்டர் பிருங் கிரஹம் என்பவர் இப்போது புதுடில்லி வந்துசேர்ந்துள்ளார். பாகிஸ்தான் அரசினருடன் காரச்சியில் ஆலோசனை செய்தபின்னரே இங்கு வந்துள்ளார். பிரதமர் நேருவுடன் கலந்துபேசினர். நேருஜி இந்திய அரசினர் சார்பாகத் தமது எண்ணங்களை ஒளிப்பு மறைப்பின்றி விளக்கமாகக் கூறினர். (1) ஐக்கியநாடுகள் சங்க எண்ணப்படி இந்திய சைனியங்கள் காஷ்மீரைவிட்டு விலக வியலாது. (2) பாகிஸ்தான் அரசினர் காஷ்மீர் சமஸ்தானத்தில் தமது படைகளை வைத்திருக்கும் உரிமை சிறிதும் உடையரல்லர். (3) பாகிஸ்தன் காஷ்மீர் மீது ஆக்கிரமித்துச் சென்றதாற் குற்றவாளியாயிற்று. எனவே சனசம்மதம் அறியும் விஷயத்திற் பாகிஸ்தானுக்கு எவ்வித உரிமையும் அங்கேகிடையாது. (4) ஐக்கிய நாடுகள் சங்கப் பிரதிநிதி இந்திய அரசினரதும் காஷ்மீர் அரசினரதும் உதவியைக் கொண்டு சனசம்மதம் அறிய வேண்டும். (5) காஷ்மீர் விஷயமாக முடிவுசெய்யும் உரிமை தனித்த ஒருவர்பொறுப்பில் விடக்கூடாது. காஷ்மீர் மக்களுக்கே இந்த உரிமையுண்டு. கிரஹம் அவர்கள் இந்தப் பிணக்கினை எப்படித் தீர்ப்பாரோ தெரியவில்லை.

**பிரஜா கட்சி**

ஆச்சாரியார் கிருபளானியின் தலைமையில் ஏற்பட்ட புதிய பிரஜா கட்சி மிக்க ஆரவாரஞ் செய்கின்றது. தமது கட்சியைச் சனங்கள் ஏற்காவிடின் நிச்சயமாக இந்தியாவிற் கொம்யூனிஸம் புகுந்து கொடுமை இழைப்பது நிச்சயம் என்பது அவர் நம்பிக்கை. அரசினரின் பிழையான ஆட்சி முறையே இதற்குக் காரணம் என்கின்றார். புதிய பொதுத் தேர்தல் மிக்க பொறுப்போடு கூடியதென்றும் இந்தியாவின் வருங்காலத்தை அதுவே தீர்மானிக்குமென்றும் அவர் தெரிவிக்கின்றார். இப்போது தாம் ஆரம்பித்த கட்சியை மக்கள் அனுவதித்தாற்றான் மகாத்மா காந்தியின் உண்மையான வாக்குகள் கைகூட இடமுண்டு; அன்றேல் நிச்சயமாகப் பலாத்காரத்தோடு கூடிய புரட்சி ஏற்பட்டே தீருமென்கின்றார். காங்கிரஸ்கட்சியினரிடம் மூன்று பெரியபிழைகள் இருப்பதாகக் கூறினர். 1– பிரிட்டிஷாரைத் துரத்தினதுடன் உண்மைச் சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று எண்ணியது. 2– மகாத்மாகாந்தியடிகள் எடுத்துக் காட்டிய சீரமைப்புத்திட்டத்தைக் காங்கிரஸ் அரசினர் கைக்கொண்டு அநுட்டியாதது. 3- பழைய முறைகளைக் கையாண்டுகொண்டு சுயநலப்போக்குடன் நடந்துகொள்வது.

**வினோபா பாவே**

இவர் மகாத்மா காந்தியடிகளின் அடிச்சுவட்டினைச் சிறிதுந் தவறாது பின்பற்றுகின்ற தலைவராவர். பொது மக்கட்கு இவரிடத்துள்ள நம்பிக்கைக்கு எல்லையில்லை. இவர் போதனைகளைப் பொன்னெனப் போற்றுகின்றனர். சமீபத்தில் இவர் ஹைதராபாத்தில் கால்நடையாக 1100 மைல் தூரம் யாத்திரை செய்தார். இந்த யாத்திரை முடிவடைய மூன்றரை மாதங்கள் சென்றன. இவர் யாத்திரையிற் செய்த போதனைகளும் அதனால் ஏற்பட்ட நன்மைகளும் இம்மட்டன்று. கொம்யூனிஸ்ட் கலகங்கள் முற்றாக நின்றுவிட்டன. கொள்ளைகள் பிளவுகள் அடியோடு தொலைந்துவிட்டன. அத்துடன் தனவந்தர் தங்கள் நிலம்புலங்களைப் பொதுமக்கட்கிடையில் பங்கிட்டுக் கொடுக்க இணங்கிவிட்டனர். பெரிய அரசினராற் செய்ய இயலாத வேலையை இவர் செய்துமுடித்தனர். இப்போது வர்தா சென்று மகாத்மா ஆரம்பித்த தொண்டுகளை நடத்திவருகிறார். காந்தியடிகள் எடுத்துரைத்த சர்வோதயக் கொள்கைகளை விரைவில் அனுட்டிக்காவிடின் இந்தியாவில் நிச்சயமாகக் கொம்யூனிஸம் வந்துசேருமென்பது இவரது அபிப்பிராயம்.


**கோட்டு விற்பனவு விளம்பரம்**
**இல. 6809.**

அச்சுவேலி வடக்கு,
முத்தையா கைம்பெண் அன்னமுத்து.
வழக்காளி

அச்சுவேலி வடக்கு
1. குழந்தையன் வயிரவன்
2. பெண் பொன்னி.
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 6809–ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1951–ம் ஆண்டு ஜூலை (ஆடி) மாதம் 25–ந் திகதி (25-7-51) புதன் கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 778.75-ம், இதில் ரூபாய் 600/ க்கு 14-7-50 திகதி தொடக்கம் 19-9-50 திகதி வரைக்கும் 100-க்கு 10 வித வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வித வட்டியும், கோட்டுச்செலவும். இதில் கோட்டுச் செலவு ரூபா 550/ இறுபட்டது.

**காணியின் விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலிக் கோவிற்பற்று அச்சுவேலி வடக்கிறை 'கொல்லனறியன்' நெற்பரப்பு பத்து (10-ம்) எல்லை: கிழக்கு, றோட்டு. வடக்கு, சிவலை கந்தரின் ஆதனம். மேற்கு, சின்னக்குட்டி கிருஷ்ணனின் ஆதனம். தெற்கு, கார்த்திகேச நாகலிங்கத்தின் ஆதனம். இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed
Auctioneer
தெல்லிப்பழை
9-6-51 [4349]



**தேவை**

**சித்திரா படமாளிகை**

சாவகச்சேரி சித்திரா படமாளிகைக்கு மனேஜர், கணக்கப்பிள்ளை (Cashier) முதலானோர் தேவை. பிணைக்காசு எவ்வளவு கட்டக்கூடுமெனவும் சம்பளம் எவ்வளவு வேண்டியதெனவும் விண்ணப்பத்திலே தெரிவிக்கவும்.

மீசாலை எஸ். தம்பு



**கோட்டு விற்பனவு விளம்பரம்**
**இல. 6875**

உரும்பராய்
கந்தையா சபாரத்தினம்
வழக்காளி

உரும்பராய்
1. கோவிந்தர் பொன்னையா
2. பெண் செல்லம்மா
3. கோவிந்தர் செல்லத்துரை
4. பொன்னையா தங்கராசா
5. பொன்னையா சோமசுந்தரம்

4-ம் 5-ம் எதிராளிகள் பராயமற்றவர்கள், இவரின் பராமரிப்புக்காரன் 1-ம் எதிராளி. எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 6875-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள், 1951-ம் ஆண்டு ஆகஸ்டு (ஆவணி) மாதம் 15-ந் திகதி (15-8-51) புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:** முதல் வட்டி ரூபாய் 1052-50-ம், இதில் ரூபாய் 1000-க்கு 2-8-50 திகதி தொடக்கம் 16-11-50 திகதி வரைக்கும் 100-க்கு 7 வித வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வித வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 261-37 சதம்.

**காணிகளின் விபரம்**

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய்க் கோவிற்பற்று உரும்பராயிறை 'பாத்தைப்புலம்' நிலைப்பரப்பு 21-ம் தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்கால் உரித்தும். எல்லை: கிழக்கு, சின்னையா பெண் வள்ளிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு, அம்பலவாணர் பெண் செல்லாச்சிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு, செல்லர் பெண் ஆச்சிக்குட்டிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு, சின்னத்தம்பு பெண் பூதாத்தைக்குரிய ஆதனம். இதிற் சொரியலாய் நிலைப்பரப்பு நாலு (4-ம்) அதற்குரியவைகளும். முற்பதிவு K. 153/65.

2. மேற்படி உரும்பராயும் உரும்பராய் தணக்காரப் பிரிவு இறை "சின்னம்மா ஓடையும், சாந்தி ஒல்லையும்" நிலைப்பரப்பு $7\frac{5}{8}$ அல்லது நிலைப்பரப்பு $7\frac{3}{4}$. ஆனால் ஆட்சிப்பட நிலைப்பரப்பு $8\frac{3}{8}$-ம் வடக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றுப்பங்கும், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு, கை ஒழுங்கையும், ஒழுங்கை முகப்பும், செல்லப்பா சின்னையாவின் ஆதனமும். வடக்கு, செல்லப்பா சின்னையாவின் ஆதனமும், கை ஒழுங்கை முகப்பும். குமாரு கைம்பெண் சின்னாச்சியின் ஆதனமும். மேற்கு, அம்பலவி செல்லையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு 1-ம் எதிராளிக்கும் வேலுப்பிள்ளை நாகலிங்கத்திற்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும். முற்பதிவு K. $\frac{148}{98}$.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner &
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 26-6-51 [4348]





# நகரில் அசுத்தம்

## இலக்கிய மேதையின் ஞாபகம்

6-7-51

மரகதத் தீவெனவும், கடலின் கண் முத்து எனவும் இலங்கையைப்பற்றி வெளிநாட்டார் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர். இத்தீவின் தலைநகரமாகக் கொழும்பு விளங்குகின்றது. கொழும்புமாநகரம் மிகத் துப்புரவான நகரமென வெளிநாட்டார் கருதி வருகின்றனர்.

உண்மையாகவே கொழும்பு நகரம் துப்புரவாக இருந்து வந்ததுமன்றிக் கீழ்த்தேசங்களிலுள்ள நகரங்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் விளங்கியது. ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. வீதிகளிலும் மக்கள் வதியும் இடங்களிலும் அழுக்குகள் நிறைந்திருப்பதைக் காண்கின்றோம். கடைகளில் ஈக்கள் மொய்த்துச் சங்கீதக் கச்சேரிகளும் நடாத்துகின்றன. நகர சபை அதிகாரிகள் இச்சீர்கேட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயற்சிப்பதுடன், பொது மக்களும் நகரம் சுத்தமாக இருக்க வேண்டுமென்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

**புதுமைப்பித்தன் நினைவு**

"பண்டைத் தமிழ் மன்னர் காலத்திற் புதுமைப்பித்தன் இருந்திருந்தால் இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க மாட்டார். அவர் குபேரராக இருந்திருப்பர். இத்தகைய எழுத்தாளர்களின் குடும்ப க்ஷேமத்துக்குத் திரட்டும் நிதிக்கு நாம் உதவுவதுசிறந்த பணியாகும்" என்று விவேகானந்த சபை மண்டபத்தில் மேதை புதுமைப்பித்தன் நினைவு நாள் திங்கட்கிழமை கொண்டாடப் பட்டபோது, அதற்குத் தலைமை தாங்கிய கல்வி மந்திரி திரு. கே. கனகரத்தினம் கூறினார். கூட்டத்திற்கு இளம் எழுத்தாளர் பலர் வந்திருந்தனர். திரு. ஆ. குருசாமியினதும் ஏனையோரினதும் இடையறு உழைப்பினால் இக் கூட்டம் இவ்வளவு சிறப்பாக நடைபெற்றது. புதுமைப்பித்தனின் இலக்கியப் பணியையிட்டு திருவாளர்கள் சோ. சிவபாதசுந்தரம், வீர சிவசுப்பிரமணியம், எஸ். செல்வராஜன், ஆ. குருசாமி, ஜனப் எஸ். எம். கமால்தீன் ஆகியோர் பேசினர். நிதி திரட்டுவதற்கு திரு. கே. கனகரத்தினம் அவர்களைத் தலைவராகக்கொண்ட நிர்வாகசபையொன்று அமைக்கப்பட்டது.

**சைவ சித்தாந்த வகுப்பு**

கொழும்பு விவேகானந்த சபையின் புதிய உத்தியோகத்தர்கள் மிகவும் ஊக்கமாகக் காரியம் பார்த்துவருகிறார்கள். வெள்ளவத்தையில் சைவ மங்கையர் கழகமண்டபத்தில் சென்ற திங்கட்கிழமை தொடக்கமாகச் சைவசித்தாந்த வகுப்பொன்று தினமும் மாலை ஆறுமணி முதல் எட்டு மணி வரை நடைபெற்றுவருகிறது. சிவஞானசித்தியாரின் சாரத்தைப் பழகி சைவ சித்தாந்த சரபம் ஸ்ரீ காசி வாசி ஈசான சிவாசாரியார் அவர்கள் குருவாக இருந்து போதித்து வருகிறார்கள். சேர் கந்தையா வைத்தியநாதன், திரு. கே. ஆழ்வாப்பிள்ளை முதலிய பல தமிழ்ப் பிரமுகர்களும் பெண்களும் இவ் வகுப்பிற் சேர்ந்து படித்து வருகின்றனர். அடுத்த ஞாயிற்றுக்கிழமை மாணிக்கவாசகர் குரு பூசையையும் விவேகானந்த சபை சிறப்பாகக் கொண்டாடும் என்ற அறிவித்தலும்வெளிவந்திருக்கிறது.

**'ரேடியோ சிலோன்'**

கொழும்பு வானொலியிற் கல்வி ஒலி பரப்புக்குப் பொறுப்பாக செல்வி எம். ஸவியாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முதலாம் திகதி கடமை யேற்றுள்ளார். இவருக்குச் சிங்களம் தமிழ், ஆங்கிலம் என்னும் மூன்று பகுதிகளுக்கும் உதவியாளர் நியமிக்கப்பட்டு உதவிபுரிவார் எனக் கேள்வி. ஒலிபரப்பில் அனுபவமுள்ள இவர் கல்வி ஒலிபரப்பைச் செவ்வனே நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**குமாரி கமலா**

நாட்டிய கலாமணியும் சினிமா நட்சத்திரமுமான குமாரி கமலா கொழும்புவந்து சேர்ந்துள்ளார். வெள்ளிக்கிழமை மாலை சென்ற் பீட்டர்ஸ் கல்லூரி மண்டபத்தில் ஒரு நடனக் கச்சேரி நிகழ்த்துவார். கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் கச்சேரிகள் நடத்துவார் எனக் கேள்வி. இவர் சிறுவயதிலிருந்தே நாட்டியத்தில் நாட்டங் கொண்டு பெரும் புகழ் ஈட்டியுள்ளார்.

# கல்வி விழா

## பலாலி ஆசிரியகலாசாலை

இம்மாதம் 12, 13, 14-ம் தேதிகளிற் பலாலி அரசினர் ஆசிரியகலாசாலையில், 1951-ல் கல்வி விழா நிகழ்ச்சிகள் பழைய மாணவர் சங்க ஆதரவில் நடைபெறும்.

கல்வி மகாநாடும் பொருட்காட்சியும் விழாவின் பிரதான அம்சங்களாகும்.

## தமிழ்ச் சிவஞானபோதம்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ணர்களைப் போன்று பௌத்தர்கள் சைவசமயத்திற்கு அத்துணைக் கொடும் பகைவர்களுமல்ல, சைவ நூல்களை அழித்தவர்களுமல்ல. பௌத்தரும் சைவரும் ஒருங்கு வாழ்ந்தமைக்கு மணிமேகலை, சிலப்பதிகாரம் சான்றுபகரும். சமணர்களே சைவசமயத்தை வேரோடு அழிக்கக் கங்கணங் கட்டி நின்றவர்கள். இவர்களின் கொடுமைக்கு அஞ்சியே திருமந்திரம என்னும் தமிழ் ஆகமம் வழங்காமற் திருவாவடுதுறைக் கோவிற் பலிபீடத்தின் கீழ்ப்புறத்து வைக்கப்பட்டிருந்தது. தேவார திருவாசகங்கள் தில்லைச் சிற்றம்பலத்தறையிலே பூட்டி வைக்கப்பட்டன. அவைகளிற் பெரும் பகுதியைக் கறையான் தின்று அழித்தது. இப்போ மிளிர்வன எஞ்சிய பாகங்களே. ஞானமிர்தம் சைவ மடங்களிற் பாதுகாத்து வைக்கப்பட்டது.

—தொடரும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




இலக்கியப் பொழில்: ஆசிரியர்: எம். ரம்பொலாமாஸ்கரேனஸ் எம். ஏ. பிரசுரம்: ஒற்றுமை நிலையம் நெ. 8, வியாசராவ் தெரு தியாகராய நகர், சென்னை; 17; விலை: ரூ 1-8-0

**நமது வாசிகசாலையில் விமர்சனத்துக்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதனைக் கவனிப்பாராக.**

முற்காலத்திலே சீத்தலைச் சாத்தனார் என்னும் புலவர் நூல்களிலே பிழைகளைக் கண்டால் மனம் பொறுக்க மாட்டாது தனது தலையில் எழுத்தாணியாற் குத்திக் கொள்வாராம். எனக்கோ ஒரு நல்ல புஸ்தகத்தைக் கண்டால் அதன் ஆசிரியருக்கு ஒரு கோயில் கட்டி கும்பிடவேண்டுமென்று தோன்றும்'. இந்நூலைவாசித்த பொழுதும் இந்த எண்ணந்தான் மனசில் எழுந்து நின்றது. அவ்வளவு அழகாய் ஆசிரியர் மாஸ்கரேனஸ் இந்நூலை ஆக்கியிருக்கிறார்:

இந்நூலிலே வரும் பதினைந்து கட்டுரைகளும் வானொலியிற் பேசப்பட்டவை: வரையறுக்கப்பட்ட கால எல்லைக்குள், எடுத்துக் கொண்ட பொருளின் முக்கியமான கருத்துக்களை எடுத்துச் சொல்லவேண்டுமாதலால் சில கட்டுரைகள் போதியளவுக்கு விரிவு பெறவில்லை. ஆனால் இக்குறையே இக்கட்டுரைகளுக்கு ஒருவேக கதியையும், மனசில் பதிந்து சிந்திக்கவைக்கும் வலிவையும் கொடுத்து உன்னதமாக்குகின்றது. இக்கட்டுரைகள் ஆசிரியரின் ஆழ்ந்த புலமையையும், நுண்ணறிவையும் மாத்திரம் அல்ல, அவருடைய பண்புபெற்ற மனத்தையும் எங்களுக்கு காட்டுகின்றன.

வித்தியா சாலைகளில் இந்நூல் பாடபுத்தகமாக இடம் பெறவேண்டும் இதைப்போல அழகான, தூய்மையான், இலக்கண சுத்தமான நூல்கள் இப்பொழுதெல்லாம்தமிழில் கார்த்திகைப் பிறை போலத் தானே வெளிவருகின்றன.

இந்நூலின்முகப்புப்படமே மனசில் ஒரு புனிதத்தன்மையையும்,அமைதியையும், பய பக்தியையும் உண்டாக்குகிறது. மிக அழகாய்வெளிவந்திருக்கும் இந்நூலை வரவேற்கிறேன்; எல்லோரும் படித்து இன்புற வேண்டுமென்பதே எனது பெருவிருப்பம்.

—சி. வைத்தியலிங்கம்

⊛

சாஞ்சனையின் கனவு: ஆசிரியை: லக்ஷ்மி' பிரசுரம் தமிழ் பண்ணை லிமிடெட், தியாகராச நகர், சென்னை விலை: ரூ 4-0-0

இது ஒரு சாதரணமான கதை; ஆனால் மிக உயர்ந்த ரீதியில், இக்காலத் தமிழ் இலக்கியத்துள் ஒன்று என்னும் வரிசையில் சேர்க்கத்தக்க அழகுடன் எழுதப்பட்டிருக்கிறது. இதை எழுதிய ஆசிரியை ஒரு டொக்ரர் என்பதற்குச் சான்று, இந்த நாவலிலேயேகாணக் கூடியதாக இருக்கிறது. ஒருவைத்தியசாலையில் இருக்கும் டொக்ரர் மார் கூட மனிதத்தன்மை வாய்ந்தவர்கள் என்பதை—அதாவது அவர்களுக்கும் தொழில் சம்பந்தப்பட்ட பொறுமை, புகழில் விருப்பம் முதலியன உண்டு என்பதை இந் நாவல் மூலம் ஆசிரியை விளக்கியுள்ளார்.

பணம் படைத்த ஒரு ஜமீந்தார், காஞ்சனை என்ற ஒரு சாதாரணப் பெண்ணின் அழகில் தனது மனத்தைப் பறிகொடுத்து, அதன் விளைவாக அவளை விவாகம் செய்துகொள்கிறார். விவாகமும் செய்வதற்குமுன்னரே அந்த ஜமீந்தார் கன்னித் தன்மை கழிந்தவர். பானுமதி என்ற தாசியையும் அவர் ஆதரித்துக்கொண்டிருந்தார். பானுமதி அவர்மீது கொண்டிருந்த காதல் எத்துணை பரிசுத்தமானது; தன்னல மற்றது என்பதைக் கதையின் இறுதியில் நாம் அறிகிறோம். மனைவியிலும் பார்க்க மேலான பெருந்தன்மையுடன் அவள் நடந்து கொண்டமையைப் பார்க்கும் போது, ஜமீந்தார் பானுமதிக்குத் துரோகம் செய்துவிட்டார் என்ற உணர்ச்சி இந்நாவலை வாசிப்போர் மனதில் எழுவது நிச்சயம்.

'நாணமிக்கமடைந்த'(107) 'கர்ப்பினி (161, 165) ,' ஜமீந்தாரினி (213, 216),' சாப்பாடு இரங்கவில்லை'( 217 )' கூறைக் கட்டிடம்' ( 245 ): போன்ற செற்கள், சொற்றொடர்கள் நூலிற் பல இடங்களிற் காணபபடுகின்றன. அடுத்தபதிப்பில் இவை சீர்திருத்தமடையுமென நம்புகிறோம்.

⊛

THE UNIVERSAL CALENDAR for all — March 1951—1952. அகில உலகப் பஞ்சாங்கம்.

—1951 சித்திரை — 1952 சித்திரை — பேராசிரியர் மணியம் அவர்களாற் கணிக்கப்பெற்றது. விலாசம்: சித்தங்கேணி, யாழ்ப்பாணம்; விலை: ரூ. 1-0-0.

பேராசிரியர் மணியம் அவர்களின் ஆராய்ச்சியின்படி தமிழ் வருஷப்பிறப்பு மார்ச் மாதம் 22ந் திகதி கொண்டாடப்பட வேண்டுமெனத் தெரிகின்றது.புதுவருடம்ஒரு சந்திர கிரண காலத்திலேயே நிகழ்கின்றதென்பது இவ்வறிஞரின் முடிபு. அகில உலக மக்களுக்கும் உகந்த முறையிற் சாஸ்திர ரீதியிற் கணிக்கப் பட்டுள்ள பஞ்சாங்கம் இதுவொன்றேயெனத் தெரிகின்றது. உலகெல்லாம் ஒன்று என்ற கொள்கை உரம் பெற்றுவரும் இந்நாட்களில், அகில உலக மக்களுக்கும் பொதுவான ஒருபஞ்சாங்கம் இருக்க வேண்டியதும் அவசியமே. இது ஒற்றுமைக்கும் சமாதானத்துக்கும் உதவிசெய்வதாகும். இத்துறையிற் பேராசிரியர் மணியம் அவர்களின் யோசனைகள் எவ்வளவு தூரம் பயன்படு மெனத் தெரிய வில்லை.

—எம். எம்.

# வானிசை

4-ம் பக்கத்தொடர்ச்சி

மனோகரிராகத்தைக் கையாளும்போது மத்திமஸ்தாயையிற் பஞ்சமத்துக்குக்கீழ் தர் பார்ராகச்சாயலே ஒலித்துக் கொண்டிருந்தது. தார ஸ்தாயியிற் பாடும்பொழுது தேவமனோகரி தெரியாமல் மறைந்துபோய்விட்டது. இதே இராகத்திற் பாடப்பட்ட நீகேலனு என்ற உருப்படியை அழகாகப் பாடவில்லை. சிட்டைஸ்வரம் தாளநிதானமின்றிப் பதறிப் பாடப்பட்டது. காம்போதி பரவாயில்லை. கற்பனை சுரங்களின் முறை பிடிக்கவில்லை. சிலவேளைகளில் எல்லாச் சுரங்களும் ஒரே ஸ்தாயையிற் பேசுகின்றன. இராக மாலிகை விருத்தம் பாவத்துடன் விளங்கியது.

இவருக்கிருக்கிற சாரீர வளத்தைப் பயன்படுத்திக் கற்பனைசுரம் பாடுகிற வழிகளைக் கையாண்டு இராகங்களைப் போஷித்துப் பாடினாராற் கச்சேரி நன்கு சோபிக்கும்.

28-6-51

திரு. கே. மாதவன்

இவருடைய கச்சேரி பரவாயில்லை. 'உனை நம்பினேன்' என்ற கீரவாணிப் பாட்டு நன்றாயிருந்தது. கல்யாணி இராகத்தை இன்னும் கவர்ச்சியாகப் பாடியிருக்கவேண்டும். 'இராகம் தெரியுந்தானே, ரேடியோ நிலையத்துக்குட் புகுந்து பார்த்துக்கொள்ளுவோம்', என்று நினைக்கக்கூடாது. பாடிப் பாடிக் கற்பனைகளை உண்டுபண்ணப் பழகினாற்றான் ரேடியோவில் ஓரளவுக்கு நன்றாகப் பாடலாம். இதைத் திரு. மாதவன் கவனிக்க வேண்டும். தாரஸ்தாயையில் இவர் பாடும்பொழுது குரலை அனுவசியமாக நசிப்பதைக் குறைத்துக்கொள்ள வேண்டும். பாட்டுக்களை நன்றாக உச்சரிக்க வேண்டும். சில நேரத்தில் ஒரு பதமேனும் விளங்குவதாயில்லை.

வயலின் வித்துவான் கல்யாணியை நன்றாக வாசித்தார். அப்படியிருந்தும் சில இடங்களில் அபஸ்வரங்களும், விரல் நடுக்கத்தாற் பிடிக்கிற சுரங்கள் வேறு சுரங்களோடு சேர்ந்தும் வருகின்றன. இவர் இவற்றைக் கவனிப்பாரானால் முதல்தர பக்கவாத்தியகாரராக விளங்குவார். மிருதங்கம் வாசித்தவர் சுருதிக் கோளாறு செய்தார். வாத்தியம் சரியான நிலையில்லாதவிடின் வாசிக்கக்கூடாது. வித்தையை விளங்கச்செய்யின் வாத்தியத்தைத் தன்வசப்படுத்த வேண்டும்.

29-6-51

திரு. நா. ப. பாலசந்திரன்

இவர் 'வாரணமுகவா' என்று ஹம்சத்வனியிற் பாடினார். இவர் பாடல்களைப் பாவத்துடனும் தெளிவாகவும் உச்சரிக்கிறார். சங்கராபரணம் பரவாயில்லை. 'உன் மேல்' என்ற பாடலைப் பாடியபொழுது ஓர் இடத்திற் சாகித்தியக் குழப்பம் ஏற்பட்டபோதிலும், அதைத் திருத்திப் பாடினார். ரத்தின காந்தி என்ற ஓர் அபூர்வ இராகத்தின் களையைக் காட்டி உருப்படியை நன்கு பாடினார். கற்பனை சுரங்கள் மிகக் குறைவு. திருப்புகழும் ஹம்சாநந்தி இராகத்தில் வெளிவந்த கற்பனைகளும் இவர் முன்னுக்கு

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

# கொந்தளிப்பு •

செ. சி. பரமேஸ்வரன்

## 3. என்ன ஆச்சரியம்!

சண்முகம் கொழும்பிற் படித்துக் கொண்டிருந்தான். பார்ப்பதற்கு நல்ல அழகான வாலிபன் "நல்ல பிள்ளை ஆனல் பெரிய பிடிவாதக்காரன்!" என்று ஊரில் அவனுக்குப் பெயர். அந்த மாசத்தில் அவனுக்குக் கடுமையான காய்ச்சல் வந்துவிட்டதால் யாழ்ப்பாணத்துக்குக் கூட்டிக் கொண்டு வந்திருந்தார்கள். யமலோகத்தை எட்டி எட்டிப் பார்த்துவிட்டு, ஒருவிதமாகப் பூலோகவாழ்க்கையை நிச்சயப் படுத்திக் கொண்டான். அப்போதுதான் வயல்வேலைகள் ஆரம்பமாகியிருந்தன. வெகுநாள் படுத்தபடுக்கையாய்க் கிடந்தவனுக்கு உடற்பலம் மீண்டதும் எழும்பி உலாவ விருப்பமுண்டாவது இயல்பல்லவா? ஆகவே சாப்பாடு கொண்டு வந்த வேலைக்காரனின் துணையோடு வயலைப் பார்க்க வந்தான். வந்த இடத்தில் இத்தகைய ஒரு சூழலில் அகப்பட்டுக் கொள்ள நேருமென்பதை அவன் கண்டானா, என்ன?

சண்முகத்தின் மனம் கட்டுக் கடங்காமல் எங்கெல்லாமோ பாய்ந்து கொண்டிருந்தது. ஏதேதோ வெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தது. அவனால், தான் இருக்குமிடம், செய்யும் காரியம் அருகில் இருக்கும் ஆட்கள் ஆகிய ஒன்றையுமே அறிந்து கொள்ள முடியவில்லை. ஏதோ பேய் பிடித்தவன் போல் ஒரே சிந்தனைமயமாக இருந்தான்.

"வயலிலே என்ன நடக்குது?" என்று அவனது தாய் கேட்டாள்.

"எல்லாருந்தான் சாப்பிட்டினம்" என்றான் அவன்.

அவன் அதைக் கவனிக்காமலே,

"அரிவி வெட்டி முடிஞ்சுதோ, இன்னும் கிடக்கோ?" என்று விசாரித்தாள்.

"வேலைக்காரன்தான் சாப்பாடு போட்டான். நான் வயலைச் சுத்திப் பார்த்தேன்" என்று உளறிக் கொட்டினான்.

அவள் ஆச்சரியத்தோடு நிமிர்ந்து பார்த்தாள். அவன் எங்கோ பார்த்தவாறு சிந்தனையிலாழ்ந்திருந்தான். "பாவம்! பள்ளிக் கூடத்து நினைவு வந்து விட்டது, பிள்ளைக்கு" என்று எண்ணிக் கொண்டு பேசாமற் போய் விட்டாள்.

சண்முகத்துக்குத் தன் நிலையைப் பற்றிப் பெரிய ஆச்சரியமாயிருந்தது. இவ்விதம் அவன மனம் இதற்குமுன் எப்போதும், யாரைக் கண்டும் பலவீன மடைந்ததில்லை.

பொழுதுபடுகிற சமயமாய் விட்டது. சண்முகம் வீட்டை விட்டுப் புறப்பட்டான். வயலை நோக்கி நடந்தான். பாதிவழிதான் போயிருப்பான். அச்சமயம் அவனுக்கு முன்னால், குறுக்கு ஒழுங்கை ஒன்றிலிருந்து திடீரென்று ஒரு பெண் வெளிப்பட்டாள். அவள் இடையில் தண்ணீர் அள்ளும் மண்பானை ஒன்றும், கயிற்றில் தாங்கும் வாளி ஒன்றும் இருந்தன. அவள் பூரணந்தான் என்று தெரிந்ததும், சண்முகம் திடுக்கிட்டுப் போனான். மேலேபோவதா, நிற்பதா என்று அவன் தீர்மானிப்பதற்குள் அவள் அவனருகில் வந்து விட்டாள்.

"எங்கே போறியள்?" என்று அவள் கேட்டாள்.

"வயலுக்குத் தான்!

"வயலுக்கா?"

"ஓம்! அங்கே என்ன நடக்குது?"

"அங்கை இப்ப என்ன நடக்கிறது? எல்லாரும் வீட்டைபோயிட்டார்களே!"

அப்போதுதான் பொழுது படப்போகிற தென்பதையும், வேலைக்காரர்கள் வீட்டுக்குப் போயிருப்பார்களென்பதையும் சண்முகம் உணர்ந்தான்.

"அடடா! ஏதோ யோசனையிலே எழும்பி வந்துவிட்டேனே!' என்று அவன் தனக்குத்தானே சொன்னது அவளுக்கும் கேட்டது. "அது கிடக்கட்டும்.நீஎங்கே போறாய்?"

"பாத்தால விளங்காதாக்கும்?-தண்ணிக்குத்தான்!" சண்முகத்துக்குப் பிறகு ஒன்றும் பேசத் தோன்றவில்லை. பூரணத்துக்கும் அது ஏதோ ஒருமாதிரியிருந்தது. தயங்கிக்கொண்டே அப்பாற்போனாள். சில அடிகள் நடந்தபிறகு, ஏதோ ஓர் எண்ணத்தினால் திரும்பிப் பார்த்தாள். அவன் நின்றது நின்றபடி தன்னையே பார்த்துக்கொண்டு நிற்பதைக் கண்டதும் அவள் இதயம் பெரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தது.

## 4. மாயக் கோபம்

பூரணம் வெகு சீக்கிரத்திலேயே சண்முகத்தின் மனநிலையை அறிந்துகொண்டு விட்டாள். எந்தப் பெண்தான் அறியாமலிருக்கமுடியும்?

அவள் தண்ணீர் அள்ளுவதற்குக் கிணற்றடிக்குப் போனால் அங்கே சண்முகம் காற்று வாங்கிக்கொண்டோ உலாவிக் கொண்டோ நிற்பான். வயல் வெளிக்குப் போனால் வரம்பில் அவன் நடந்து திரிவான். கடைக்குப்போனாற் பூரணத்துக்கு அடுத்தபடி சாமான் வாங்குவது அவனாய்த்தானிருக்கும். இவ்விதம், பாரதியாருடைய பாட்டுக்களிலே வரும் கண்ணனைப் போன்று, இல்லாத குறும்பெல்லாம் செய்ய ஆரம்பித்தான் சண்முகம். ஐந்தாறு நாட்களாய் இவ்விதம் நடந்துவரவே, அவளுக்கு விஷயம் விளங்கிவிட்டது.


அவளது உள்ளத்திலே எத்தனையோ உணர்ச்சிகள் ஓடின. தன உள்ளத்தை எவ்விதம் வெளிப்படுத்துவ தென்று அவள் யோசித்து யோசித்துப் பார்த்தாள். ஒரு வழியும புலப்படவில்லை.

பலவிதமான யோசனைகளுடன் பூரணம் அன்றைக்கு வயற் கிணற்றிலே குளித்து விட்டு வீட்டுக்குப் போனாள். நடுப் பகல் வெய்யில் உலகத்தையே எரித்துவிடும்போலக் காய்ந்து கொண்டிருந்தது. வயல் வெளியிலும், ஓட்டு வீடுகள் மேலும் வெகுவேகமாய் ஓடும் கானல் நீரோட்டம் காணப்பட்டது.

அந்தச் 'சுபமுகூர்த்த வேளை'யில் வயற் பக்கத்தில் என்ன வேலையிருக்க முடியும் சண்முகத்துக்கு? அவன் வயல் வெளியை நோக்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அருமையான மருமக்களே!

ஓஹோ! இதென்ன பாலர்பகுதி இடம்மாறி இருக்கின்றதே யென்று சொல்லி நீங்கள் ஆச்சரியப்படுகின்றீர்கள். மருமக்களே! கடதாசியின் விலை நாளாந்தம்அதியவண்ணமாகவே இருக்கின்றது. ஆனபடியால் பத்திரிகையின் பக்கங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் மிகமிகச் சுருக்கமாக இனி எழுதவேண்டும். நானும் அதிகம் இங்கு எழுதமுடியாது. விரைவில் இந்நிலைமை மாறிவிடும். துக்கப்படவேண்டாம்.

கேசரி மாமா

## மாமா பதில்

**கி.509. சு. செபநேசன்:** 'மலைநாடு' மிக அழகாக இருக்கின்றது.

**மே. 267. ந. சிவபாதம்:** ஆம், தமிழன் வீரம்மிகுந்தவன். சந்தேகமில்லை.

**மே.497. கே. சாமித்தம்பி:** உமது பதிவு இலக்கத்தைக் குறிக்க மறந்துவிடுகின்றீர். வேறு நல்ல பாடல்கள் அனுப்பவும்.

**மே.434. சா. பஞ்சாட்சர சர்மா:** 'கிருஷ்ணர்'கதை இனிமையாக இருக்கின்றது.

**மே.270. சி. வரப்பிரசாதம்:** உமதுகட்டுரை கிடைத்தது.

**மே.489. ந. உ. ஜெயமணி:** பதிவு இலக்கத்தை ஏன் குறிப்பிடவில்லை? பிரயாணக்கட்டுரை நன்று.

**மே.516. ந. துரைராஜ்:** சந்திரன் கதையைப் படித்தேன்.

## மருமக்கள் கடிதம்

மாமா, ஈழகேசரி பாலர் பகுதியில், சி. கனகரத்தினம் (கி.37) என்பவரால் எழுதப்பட்ட 'உடற்பயிற்சி' என்ற கட்டுரை, 1950-ம் ஆண்டு, **அமுதசுரபியின்** மார்ச்மாத இதழில், திரு. ஐ. அ. பெ. விசுவநாதம் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையாகும்.

பாலர்களின் அறிவு விருத்திக்குரிய பாலர்பகுதியில், பிறர் விஷயங்களை அப்படியே பார்த்து எழுதி அனுப்புவது இகழ்ச்சியாகும்.

மே.11 சி. நடராசா

## புதிய மருமக்கள்

**கி. 519. கா. சிவபாலன்,** அ. ஆ. பாடசாலை, பெரிய கிண்ணியா, கிண்ணியா.

**மே. 520. சி. நாகராசா,** புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

**மே. 521. சு. முருகவேள்,** கல்வத்தை, வதிரி, கரவெட்டி.

**மே. 522. அ. சிவபாதசுந்தரம்,** செட்டித்தெரு, பருத்தித்துறை.

**மே. 523. என். சோமசுந்தரம்,** சிவன்கோவிலடி, கரணவாய் தெற்கு, கரவெட்டி.

**மே. 524. சு. சுகுணானந்தன்,** C/o. திரு. நா. சுப்பிரமணியம் புகையிரத ஸ்தான வீதி, சாவகச்சேரி.

உங்கள் அனைவரையும் மருமக்களாகச் சேர்த்துக்கொண்டேன்.

## பிறந்ததின வாழ்த்துக்கள்

8-7-51 — 14-7-51

**கி. 42. சி. சத்தியபாமா. மே 109. பொ. மகாலிங்கம். மே. 178. பொ. சதாசிவம். கி. 226. வே. த. சண்முகவேல். மே. 228. ம. நவரத்தினம். கி. 230. வீ. முருகப்பா, மே. 418. சி. மாமாங்கம். மே. 421. கா. சிதாலட்சுமி, கி. 486. க. சண்முகநாதன். கி. 491. நா. சிதம்பரப்பிள்ளை.**

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வார்களாக.

## எங்கள் கேசரி

**மே. 71. வி. கந்தவனம்**

**பாலு**வின தமையனார் மேசையில் இருந்த **ஈழகேசரி**யைக் கையில் எடுத்து அதைப் பார்த்தபடியே கதிரையில் உட்கார்ந்தார். சிறிது நேரத்தின்பின் வாடிய முகத்துடன் பாலு வந்தான்.

**அண்ணன்:**— "என்னபாலு! முகம் வாடி இருக்கிறது? தமிழ்ப் பேப்பர் கடுமையோ?"

**பாலு** "ஐயோ அதை ஏன் அண்ணை பேசுவான்!"

**அண்:**- "இன்றோடு சோதனை முடிகிறதா?"

பாலு.— "ஓம்"

அண்:— "தமிழ்ப் பேப்பரைத் தா பார்க்கலாம்"

பாலு கேள்விக் கடதாசியைக் கொடுக்க அவனின் அண்ணன் அதை வாசிக்கிறான். அதில், பின் வருவனவற்றுள் எவையேனும் ஒன்றைப் பற்றிக் கட்டுரை எழுதுக. (1) அன்பு. (2) மழைக்காலம். (3) மின்சாரம். (4) மாலைக்காட்சி ...என்ற கேள்வியிருந்தது.

இப்படி அண்ணன் வாசிக்கையிற் பாலு **ஈழ கேசரி**யைத் தட்டிப்பார்த்தான். அப்பொழுது **மின்சாரம்** என்னும் சொல்லைப் பத்திரிகையிற் கண்டான். "அண்ணை......இங்கே பாருங்கள்? மின்சாரம், அதன் உபயோகங்கள், அடடா! இதை நான் முன்பு காணவில்லையே" என்று சொல்லிக் கொண்டே அதை வாசித்தான். அடுத்த நாள் பாலு அப்பத்திரிகையைப் பாடசாலைக்கு எடுத்துச் சென்று மாணவ மாணவிகள் முழுப்பேருக்கும் காட்டினான். அனைவரும் ஆவலுடன் வாசித்தனர். இப்போது எனது அன்பர்கள் பலர் **ஈழ கேசரி**யைத் தவறாது வாசித்துப் பயனடைகின்றனர்.

## இலக்கியச் செல்வம் 13

# திருக்குறள் -- அரசியல்

— — கே. எஸ். கிருஷ்ணன் — —

பாயிரவியலில் விசேஷித்துக் கூறியுள்ள கடவுள் வழிபாடு, அறனை நிலைநாட்டல், வானம் வழங்குதல் முதலான நற்செய்கைகள் காலந்தவறாது நடப்பதற்கும், அறத்துப்பாலில் விரிவாகச்சொல்லியுள்ள இல்லற துறவறங்கள் செம்மையாக நிகழுவதற்கும், இனிக் காமத்துப்பாலிற் சொல்லவிருக்கும் இன்பத்தின் செழிப்புக்கும் அரசனுடைய செங்கோன்மை இன்றியமையாததென்பது அரசியலிலிருந்து அறியக்கிடக்கின்றது.

உலகமெல்லாம் தழைப்பது மழையினாலேயே; அவ்வாறே மக்களெல்லாம் மகிழ்வுடன் வாழ்வது மன்னவனது செங்கோன்மையினாலேயே:—

'வான் நோக்கி வாழும்
உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி'

கல்வி, ஈகை முதலான விசேஷ தருமங்களுக்குக் காரணமாயிருப்பதும் செங்கோன்மைதான் என்பதை வேறொரு குறள் சிறப்பிக்கின்றது:—

'அந்தணர் நூற்கும்
அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்'

செங்கோன்மையின் சிறப்பு இவ்வாறெனின், கொடுங்கோன்மையின் விளைவென்னவென்பதைப் பொய்யாமொழி எவ்வாறு சொல்லுகின்றது பாருங்கள்:—

'முறைகோடி மன்னவன்
செய்யின் உறைகோடி
யொல்லாது வானம் பெயல்'

மழை பொய்ப்பது மாத்திரமில்லை.

'ஆபயன் குன்றும்
அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவான் எனின்'

அரசியலில் இருபத்தைந்து அதிகாரங்கள் இருக்கின்றன. முதல் அதிகாரமான இறைமாட்சியில், அரசனுக்குரிய நற்குண நற்செய்கைகளும், அரசிற்குரிய, 'படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண்' என்ற ஆறு அங்கங்களும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. அவ்வதிகாரத்தின் விரிவாக மற்றுள்ள அதிகாரங்கள் அமைந்திருக்கின்றன.

இறைமாட்சியென்னும் அதிகாரத்திற்கு அடுத்த அதிகாரங்களில் கல்வியாற் பெறும் நன்மையையும் கல்லாமையால் விளையும் கேட்டையும் எடுத்துச் சொல்லுகிறார்.

கல்வியை வலியுறுத்த வல்லதும், கல்வியில்லாது போனாலும் அறிவைப்புகட்ட வல்லதும் கேள்வி யென்பது அடுத்த அதிகாரத்தினால் விளங்குகிறது:-

கற்றில னாயினும் கேட்க,
அஃது ஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை.

இயற்கையறிவு கல்வி கேள்விகளால் வளம் பெறுமாதலால், அறிவுடைமையை அடுத்த அதிகாரத்திற் பாராட்டுகிறார். அறிவுடைமையைக் காட்டிலும் சிறந்த உடைமை வேறில்லை.

அறிவுடையார் எல்லாம்
உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்.

அறிவிற்சிறந்த அரசன் தன்னிடத்திலுள்ள குற்றங்களைக் கடிந்து, பெரியாரைத் துணைக்கொண்டு சிற்றினஞ் சேராது, தான் செய்யும் வினைகளை யாராய்வுடன் செய்வான் என்பது அடுத்த நான்கதிகாரங்களில் தொகுத்துக் கூறப்பட்டிருக்கின்றது.

வினை செயல்வகை தெரிந்த அரசன் வினைவலி தன்வலி மாற்றான்வலி துணை வலி இவைகளையும், காலம் இடம் இவைகளையும் அறியும் ஆற்றலுள்ள வனுவான் என்பது மேல்மூன்று அதிகாரங்களால் அறியக்கிடக்கின்றது.

வலி காலம் இடம் இவற்றை யுணர்ந்தவழி, வினை செயலுக்கு ஏவப்படும் அமைச்சர், தூதுவர், ஒற்றர் இவர்களைத் தெரிந்து தெளிதலிலும், அவ்வாறு தெளிந்த அவர்களை ஏவுதலிலும் அரசன் முயல வேண்டும் என்பது அடுத்த இரண்டு அதிகாரங்களில் கூறப்படுகின்றது.

கல்வி,கேள்வி, அறிவு. பெரியோர்துணை, தெரிந்து வினையாடல் முதலிய நற்குண நல்லொழுக்கங்கள் இதுவரை சொல்லப்பட்டன. துணிவுடைமை, அஞ்சாமை, கொடை, தலையளி, செங்கோன்மை, குடியோம்பல் முதலான கடமைகள் மற்றப் பதினொரு அதிகாரங்களில் வகுணிக்கப் பட்டுள்ளன.

## ஆசிரியருக்குக் கடிதம்

### "கீழ்க்கரைக் கோயில்கள்"

ஈழகேசரி 24-6-51 இதழில் வெளியாகிய 'கீழ்க்கரைக் கோயில்கள்' என்ற விடயத்தைப்பார்த்தேன். அதிற் கட்டுரை ஆசிரியர் திரு. **கோ. கி.** அவர்கள் மட்டக்களப்பிற் **கொக்குடிக் கோயில்** என்னும் ஓர் புனிதஸ்தலம் உண்டென்று எழுதியுள்ளார். இப்படி ஒரு பெயர்கொண்ட ஸ்தலம் இங்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அவர் சொல்லும் குறிப்பால் அது **கொக்கட்டிச்சோலை** என்னும் புனித ஸ்தலமாயிருக்குமென்று கருதுகிறேன். இது மட்டக்களப்பு பொத்துவில் பேர்பாதையில் தாளங்குடா என்னும்இடத்திலிருந்து பிரிந்துசெல்லும் குறுக்குப்பாதையால் ஏறக்குறைய ஒரு மைல் போனதும் மண்முனைத்துறை என்னும் இடத்தை அடையும். அவ்விடத்திலே தோணி மூலம் அக்கரையை அடைந்து அப்பாலும் ஏறக்குறைய ஒன்றரை மைலளவில் நடந்தால் இப் புனித ஸ்தலத்தை அடையலாம். இங்கு **தான்தோன்றியீஸ்பரர்** ஆலயம் உண்டு. அக்காலத்திற் கொக்கட்டி மரம் அதிகமாக இருந்தபடியால் இப்பெயர் வரலாயிற்று.

கட்டுரையாளரை இப்பிழையைத் திருத்திக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

என். முருகேசபிள்ளை

கல்லாறு,
மட்டக்களப்பு.
29-6-51

## சகலகலாவல்லி வித்தியாசாலை

### மறவன்புலோ

இவ்வித்தியாசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டம் சங்கத்தலைவர் திரு. நா. பொன்னம்பலம் ஆசிரியர் அவர்கள் தலைமையிற் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. திருவாளர்கள் வே. இரத்தினம், க, வேலுப்பிள்ளை, தி. சின்னத்தம்பி ஆதியோர் விரிவுரைகள் ஆற்றினர்.

## பத்தமேனிச் சனசமூகநிலையம்

இந்த நிலையத்தின் சார்பாக நிறுவப்பெற்ற வாசிகசாலையை மந்திரி ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் சென்ற30-6-51மாலை திறந்துவைததார்கள். ஆசிரியர் ச.வீரசிங்கம்அவர்கள் தலைமை தாங்கினார்கள். மந்திரி பொன்னம்பலம்,வீ. குமாரசாமி, எம். பாலசுந்தரம், பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் ஏரம்ப மூர்த்தி ஆகியோர் விரிவுரைகள் ஆற்றினர்.


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா ,34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணக் கட்டுமுறை:
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும், பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "சாவுதனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றுந்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள் மூலதனத்தை பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
நிருப்பர்

[4335]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The
# EeLAKESARI
T'Phone No. 805
NATIONALIST TAMIL WEEKLY
Largest circulation in Ceylon, India Burma & Malayan Union
Founder: N. PONNIAH
Vol. 22 | Chunnakam, Sunday, July, 8, 1951 | No 2

சந்தா விபரம்
ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரூ. 6·00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி சதம் 10. காசு 10

## கொந்தளிப்பு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சித் தெருவிலிருந்து இறங்கி வரலானான். கொஞ்சத்தூரம் வந்த பிறகு, நின்ற ஓர் பூவரசு மர நிழலில் அவனை நின்று விட்டான். நான்கு வரம்புகள் சேரும் ஒரு சந்திப்பில், வயல் வேலைக்காரர்கள் வெயிற் காலங்களிற் தங்குவதற்காக அந்தப் பூவரசுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்திருந்தார்கள் அக் காணிக்காரர்கள்.

அந்தப் பூவரசைத் தாண்டித் தான் பூரணம் ஊருக்குப் போகவேண்டும். அவன் இதயம் அடித்த துடிப்பின் வேகத்தை அளவிட்டுச் சொல்லமுடியாது. மெள்ள நடந்து மரத்தடியைக் கடக்க முயன்றாள்.

"பூரணம்!" என்று கூப்பிட்டான் "ஆம்" மெல்லியகுரலில்.

வழக்கமாக அவனோடு நின்று பேசுகிற அவள், இன்று 'என்ன' வென்று கூடப் பேசாமல் நடந்தாள்.

"கொஞ்சம் நில் பூரணம்' இதைக்கேட்டுவிட்டுப் போ!"

இதைக் கேட்டதும் அவள் நின்றாள். ஆனால் அவனைத் திரும்பிப் பார்க்கவுமில்லை; பேசவுமில்லை.

"என்ன. பூரணம், பெரிய கோபக்காரியாயிருக்கிறியே—அப்பப்பா!" என்றான் சண்முகம்.

அவள் வெடுக்கென்று, "அதுக்குங்களுக் கென்ன?" என்று கேட்டாள்.

"அது கிடக்கட்டும். நான் என்ன பிசாசா? ஏதோ என்னைப் பாராமலே நிற்கிறியே?"

"ஏன் வீண் கதை பேசுகிறியள்? நான் போகவேணும். உங்களோடை நிக்கக்கூடாது'

"ஏன்?"

அவன் பேசாமல் நின்றான்.

"சொல்லு சொல்லு, நானுந்தான் கெதியாய்ப் போக வேணும்..."

"உங்களோடை நிண்டால் பகிடி பண்ணுவினம். தெய்வயானை கூடப் பகிடி பண்ணுகிறாள் ......"

"என்ன வாம்?"

"எனக்குத் தெரியாது, போங்கோ!" என்று விழிக் கோணத்தால் ஓர் சிறிய பார்வை பார்த்து விட்டு நின்றாள்.

"நீயும் நானும் கள்ளமாய்ப் பேசுகிறோமெண்டு சொல்லுகிறார்களா?"

"இல்லை; 'செட்டியாற்றை மகன் ......'..."

"செட்டியாற்றை மகன்?"

"ஊஹூம்! சொல்ல முடியாது!"

"அடி கள்ளி! சொல்லாமல் மறைக்கிறியே! உன்னாலெனக்கு எவ்வளவு கெட்டபேர்?"

"என்னாலா?" என்று ஆச்சரியப்பட்டாள் பூரணம்.

"வேறே யென்ன? உன்னைப் பார்க்காமல் இருக்கவே என்னால்முடிகிற தில்லை. இப்ப, பார்! இந்த வெய்யிலுக்கை இவ்வளவு தூரம் வந்திருக்கிறேனே..."

பூரணத்திற்குத் தான் எங்கோ தேவலோகத்திற்குப் போய் விட்டதைப் போலிருந்தது.

"நீ இனி எப்ப வயலுக்கு வருவாய்?".

பின்னேரம்; மாடவிழ்க்க!" என்றாள். பிறகு, "நான் போறேன். அப்பு வந்திடுவ!" என்று விட்டு அவள் போகலானாள். துள்ளி ஓடும் புள்ளி மானின் சாயலும், தாவிப்போகும் மயிலின் சாயலும் அவளது நடையிலே பிரதிபலித்து, அவளது இதயக் களிப்பை வெளியாக்கின.

(தொடரும்)

## மூன்று வருடங்களாகப் பலி நிறுத்தம்

### கொக்குவில் - கோணாவளை வைரவர் கோயில்

இக்கோயிலில் பல வருடங்களாக நடந்துவந்த உயிர்ப்பலி மூன்று வருடங்களாக நிறுத்தப்பட்டிருக்கிற தென்பது குறிப்பிடத்தக்கது. பொது மக்களின் ஆதரவுடன் திரு. ச. த. தம்பையா அவர்களும், திரு. சு. அ. சின்னத்துரை அவர்களும் கையொப்பமிட்டு 22-6-48-ல் வெளியிட்ட விளம்பரத்தின் மூலமே இப்பலி நிறுத்தப்பட்டது. 6-7-51 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் பொங்கலும், இரவு 6 மணி முதல் அலங்கார உற்சவமும் மேற்படி கோயிலில் நடைபெறும்.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

*Testamentary Jurisdiction* } No. 1314

In the matter of the estate of the late Veluppillai Ganeshapillai of Chunnakam.

Sinnammah widow of Ganeshapillai of Chunnakam

*Vs.* *Petitioner*

1. Paruvathy widow of Aiyampillai of Chunnakam
2. Eliapillai widow of Veluppillai of do presently of Kelaniya.
3. Selliah Rasanayakam of Anuradhapura
4. Vettivelu Thurairajah and wife
5. Kamalanayakee of Mallakam presently of Chavakachcheri
6. Sellaiah Navaratnarajah of Anuradhapura

*Minor*. 7. Selvanayaki daughter of Sellaiah of do.

8. Veluppillai Tharumalingam and wife
9. Parupathipillai of do
10. Soundaram widow of Sellaiah of do.

*Respondents*

This matter coming on for disposal before V. S. Jayawickrama, Esquire District Judge. Jaffna, on the 16th day of May, 1951, in the presence of Mr. T. Kumaraswamy, Proctor on the part of the petitioner and the affidavit of the abovementioned petitioner dated 13th day of May 1951 having been read:

It is ordered that the said 10th respondent be appointed guardian-ad-litem over the minor the 7th respondent and that the said petitioner be declared entitled to have letters of Administration to the estate of the said intestate as his widow the same be issued to her accordingly unless the respondents or others interested shall on or before the 16th day of July, 1951, show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

It is further ordered that the petitioner do produce the minor the 7th respondent in Court on the said date,

This 25th day of June, 1951.

Sgd. ***V.S. Jayawickrama***
District Judge

[4347—ii]

## வானிசை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதற்கான அறிகுறிகளாகும்.

29-6-51

செல்விகள்: எஸ். வள்ளிநாயகி, எஸ். இராஜேஸ்வரி

முன்னேறிவரும் பாடகிகள் கோஷ்டியிற் செல்விகள் வள்ளிநாயகி சகோதரிகளைக் குறிப்பிட வேண்டும். கச்சேரி வெகு உற்சாகத்துடன் நடைபெற்றது; இடையிடையே பதட்டமும் ஏற்பட்டது. நாட்டை இராகம் இரசபாவத்துடன் விளங்கியது. சிம்மேந்திர மத்தியம இராகம் மோசமில்லை. கற்பனைகளை உருவாக்க முயல வேண்டும். 'வேலனையே' என்ற இசைத்தட்டில் வெளிவந்த பாடலைப் பாடியமை சனரஞ்சகமாயமைந்தது. இசைத்தட்டுப் பாடல்களைப் பாடுபவர்களுக்கு ஒரு யோசனை கூற விரும்புகின்றேன். அதாவது; இசைத்தட்டிலும் பார்க்கப் பன்மடங்கு உயர்வாகப் பாடாவிட்டால் அதனை இரசிக்க முடியாது. 'கண்ணனைக் காண்பதெப்போ' என்று ஜி. என். பி. பாணியிற் பாடியமை மெச்சற்பாலது.

திரு. பி. எஸ். தேவராஜன்

வயலின்—இவரின் பைரவி இராகத்தை மாத்திரம் கேட்டேன். வாசிப்புச் சுத்தமாக இருந்தது.

30-6 51

திரு. ஏ. பவளத்துரை

இவர் பாடிய கரகரப்பிரியா நன்றாக இருந்தது. இவர் சாரீரத்தை திரிஸ்தாயியிலும் நன்றாகச் சங்கதிகள் பேசப் பயிற்சி செய்யவேண்டும்.

1-7-51

திரு. வி. நடேசன்

சாரீரசுகம் உள்ளவர்களுள் திரு. வி. நடேசனும் ஒருவராவர். இவரது சாரீரம் ரேடியோவுக்கு நல்ல பொருத்தமானது. இவர் சுருதியில் எவ்வளவு முக்கியம் செலுத்துகிறாரோ, அவ்வளவு கரிசனை லயம், பதஉச்சரிப்புப் போன்ற விஷயங்களிலும் காட்ட வேண்டும். தோடி இராகம் கையாண்ட முறை நன்று. எனினும் சங்கதிகளைப் போடும் போது சலிப்புத் தன்மை தட்டுகின்றது. இவரது பாணிப்பு, பெரும்பாலும் சிறந்த பாணியை அனுசரித்திருக்கிறது.

## சட்டக் கல்லூரி

### தமிழ்ச் சங்கம்

இலங்கைச் சட்டக் கல்லூரிச் சங்கத்தின் ஆண்டு விழா சமீபத்தில் கொழும்பு கிறிஸ்தவ சங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பின்வருவோர் சங்கத்தின் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: எஸ். ஆனந்த குமாரசுவாமி, உபதலைவர்: எஸ். பொன்னையா, செயலாளர் ஏ. சிவானந்தன், உதவிச் செயலாளர்: எம். மீராசாய்போ, தனாதிகாரி. ஆர். சப்பந்தன், நிர்வாக சபை அங்கத்தினர்: ஜே. எம். சைமன், எம். சிவானந்தன்.




இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா சுபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1951-ம் ஆண்டு ஜூலை 8-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org